# இயல் 2

# இறையன்புவின்  படைப்புகளில் சமுதாய நோக்கு

## 2. இறையன்புவின் படைப்புகளில் சமுதாய நோக்கு

1. முன்னுரை

2. சமுதாய விளக்கமும் வரையறையும்

3. இலக்கியமும் சமுதாயமும்

3.1. இறையன்புவின் படைப்பு

3.2. நாடு

3.3. கிராம நகர வாழ்க்கை

3.4. எண்ணமும் வாழ்வும்

3.5. திருமணம்

3.6. காதல்

3.7. திருமண முறை

3.8. கணவன் மனைவி உறவுநிலை

3.9. இல்லறம் நல்லறம்

3.10. தாய்மை

3.11. தந்தை

3.12. உடை

3.13. உணவு

3.14. விருந்தோம்பல்

4. நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும்

4.1. நாகரிகம்

4.2. பண்பாடு

4.3. நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் உள்ள வேறுபாடு

5. கல்வி

5.1. இன்றைய கல்வி நிலையும், கல்வி நிறுவனங்களும்

6. சமுதாயத்தில் பெண்கள்

7. சாதி வேறுபாடு

8. சமயம்

9. அரசாங்கம்

9.1. அரசாங்க ஊழியர்

9.2. நிர்வாகம்

9.3. வாக்காளர்

9.4. வேலை வாய்ப்பு

10. குழந்தைத் தொழிலாளி

11. சுற்றுச்சூழல்

11.1. சுற்றுச்சூழலின் வகை

11.2. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வழி

12. மரணம்

12.1. மரணம் - உறக்கமே

12.2. பிறப்பும் மரணமே

12.3. மரணம் ஒரு முறையல்ல

12.4. சாகும் கலை

12.5. மரணத்தை வெல்லும் வழி

13. தொகுப்புரை

# இறையன்புவின் படைப்புகளில் சமுதாய நோக்கு

## 1.முன்னுரை

ஒன்றுக்கு மேற்பட்ட மக்கள் சேர்ந்து வாழுகின்ற ஓர் அமைப்பு சமுதாயம் எனப்படும். ஒவ்வொரு சமுதாயத்திற்கும் சில தனிப்பட்ட பண்பு நலன்களும் பழக்கவழக்கங்களும் காணப்படுகின்றன. மக்கள் தங்கள் வசதிக்கேற்ப வாழ்வியல் சூழலை அமைத்துக் கொண்டு, தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டனர். சமுதாய அமைப்பில் மக்களின் வாழ்க்கை, பழக்கவழக்கம், பண்பாடு, நாகரிகம், விழாக்கள், தெய்வ வழிபாடு, சமுதாயத்தில் பெண்களின் நிலைப்பாடு, உறவு முறைகள், மருத்துவம், சுற்றுச்சூழல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் குறித்த விளக்கமும் இதையொத்த கூறுகள் இறையன்புவின் படைப்புகளில் இடம் பெற்றுள்ள வகைமையும் இவ்வியலில் ஆராயப்படுகின்றது.

எழுத்து ஒரு தவம். எழுத்துத் தவத்தில் தனக்கென ஒரு தனிப் பாதையை வகுத்துக்கொண்டவர் இறையன்பு. ஆழமான பார்வை, தொடர்சிந்தனை, கூர்நோக்கு இவையே இவருடைய எழுத்தை அடர்த்தி மிக்கதாய் உருவாக்கியுள்ளன.

## 2. சமுதாய விளக்கமும் வரையறையும்

சமுதாயம் எனும் சொல் தோழமை என்னும் பொருள் கொண்ட இலத்தீன் சொல்லிலிருந்து பிறந்தது. குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்டகாலமாக சேர்ந்து வாழ மக்கள் ஏற்படுத்திக் கொண்ட அமைப்பே சமுதாயம் எனப்படுகிறது. சமுதாயம் என்பதற்குக் கூட்டம், சங்கம், மக்கட்திரள், பொருட்களின் திரள் என்று தமிழ் அகராதி பொருள் தருகிறது.

> **"மரங்கள் மொத்தமாக இருந்தால் தான் அதனைத் தோப்பு என்பர்.**
>
> **அது போல, தனிமனிதர்கள் சேர்ந்து கூட்டமாக வாழ்வதே சமுதாயம்"** [1]

என்று எம்.எஸ். உதயமூர்த்தி குறிப்பிடுகின்றார்.

தமிழர்கள் ஒன்று கூடி வாழும் சமுதாயமே தமிழ்ச் சமுதாயம். இதனை மே. வெங்கடேசன்,

> **"மனித சமுதாய வாழ்வியலை உள்ளடக்கிக் கொண்டதுதான் நாடு. நாட்டில் வாழும் மனித சமுதாயங்கள் இன உணர்விலோ, மொழி உணர்விலோ, சமய உணர்விலோ தனித்துக் காணப்பட்டாலும் சமுதாயம் எனப்படும்போது பரந்து பட்ட மக்கள் கூட்டத்தையே சமுதாயமாகக் கருதுகிறார்கள்"** [2]

என்பார்.

**“தனிமனிதனில் தொடங்கி, நாடு தாண்டி, உலகம்**
**முழுவதும் சென்று சேரும் தன்மையுடையது சமூகம்”** [3]

என்றும்

**“நெடுங்காலமாகக் கூடி வாழ்ந்து தொழில் புரிந்து வரும்**
**மக்கள் கூட்டத்தையே சமுதாயம்”** [4]

எனவும் மானிடவியலார் சுட்டுவர்.

## 3. இலக்கியமும் சமுதாயமும்

**“இலக்கியம் சமுதாய மக்களின் நிலையைப் பிரதிபலித்துக் காட்டும் தன்மையுடையது. சமுதாயத்தின் புலப்பாடே இலக்கியம் என்ற கருத்து வலுப்பெற்று வருகிறது. சமூகத்திலிருந்து சமூகத்திற்காகப் படைக்கப்படும் படைப்பு சமூகத்திற்குப் பயனளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.”**[5]

இத்தகைய நோக்கில் படைக்கப்பட்ட இறையன்புவின் படைப்புகள் அனைத்துமே மக்களின் வாழ்வியலை பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடியாகத் திகழ்கின்றன.

## 3.1. இறையன்புவின் படைப்பு

ஒரு படைப்பாளனின் படைப்பு அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு சிறந்த படைப்பாக இருக்க வேண்டும். அவ்வகையில் இறையன்புவின் படைப்புகள் மக்களின் மனதில் உயர் குணங்களை, ஆழ்மனத்துள் பொதிந்திருக்கும் நல்ல எண்ணங்களைத் தூண்டி நற்கருத்துகளை விதைப்பனவாக அமைந்துள்ளன. சுந்தர ஆவுடையப்பன் இறையன்புவின் எழுத்து பற்றிய தனது எண்ணத்தை,

**“இறையன்புவின் பேனா இளைஞர்களுக்கு எழுச்சியூட்டும்.**
**இறையன்புவின் பேச்சு அயர்ச்சியை மாற்றிப் புத்துணர்ச்சியூட்டும்”**[6]

என்று பதிவுசெய்கின்றார்.

**“இலக்கியம் எப்போது குறைவாக வாசிக்கவும் அதிகமாக அசைபோடவும் செய்கிறதோ அப்போதுதான் சிறந்த இலக்கியமாகத் திகழ முடியும்”**[7]

என்பது இறையன்புவின் கருத்து.

## 3.2. நாடு

ஒரு நிலமானது மேடாக இருந்தாலும் பள்ளமாக இருந்தாலும் காடாக இருந்தாலும் நாடாக இருந்தாலும் அங்கு வாழும் மக்களைப் பொறுத்தே மதிப்பீடு செய்யப்படும். நாட்டின் வளர்ச்சி அங்கு வாழும் மக்கட் தொகையைக் கொண்டோ, கட்டட வளர்ச்சியைக் கொண்டோ அளவிடப்படுவதில்லை. வாழும் மக்களின் மகிழ்ச்சியின் அடர்த்தியைக் கொண்டே வளர்ச்சி அளவிடப்படுகிறது என்பதை,

**"ஒரு நாட்டில் என்ன செல்வம் இருக்குங்கறது முக்கியமில்லை.எவ்வளவு ஒழுக்கம், எவ்வளவு சந்தோஷம் இருக்குங்கறதுதான் முக்கியம்"[8]**

என்று இறையன்பு குறிப்பிடுவதன் மூலம் அறியலாம்.

## 3.3. கிராம நகர வாழ்க்கை

இயற்கை எழிலோடு திகழும் கிராமமும், நாகரிகப் பிடியில் சிக்கி உழலும் நகரமும் அங்கு வாழும் மக்களைக் கொண்டே அடையாளப் படுத்தப்படுகின்றன. பொதுவாக,

**"திரையரங்கு அடையாளப்படுத்தும் ஊரில் பொழுதைப் போக்குபவர் அதிகம். கல்விச் சாலையை மையப்படுத்தினால் படித்தவர்கள் மதிக்கப்படும் ஊர் என்று பொருள். சிற்றுண்டியைப் பிரதானமாக்கினால் தீனிப்பிரியர்கள் அதிகம் என்றும் மருத்துவமனையை அடையாளமாக்கினால் நோயாளிகள் அதிகம் என்றும் நூலகம் அடையாளமானால் படிப்பாளிகள் அதிகம் என்றும் மதுக்கடை அதிகமானால் குடிமகன்கள் அதிகம் என்றும் பொருள்"[9]**

என்று இறையன்பு கூறுவதிலிருந்து தெளிவாகின்றது.

**"வாழ்க்கை ஒரு வரம். அன்பு நிழலில் ஒதுங்குபவர்களுக்கு அது மலர்களைச் சொரியும் மகரந்த மண்டபம்".[10]**

இப்படிப்பட்ட நந்தவன வாழ்க்கையை நரகமாக மாற்றிக் கொள்பவன் மனிதனே. இயந்திரமயமான உலகில் மனிதன் இயந்திரமாகவே மாறி நரக வாழ்வு வாழ்கிறான்.

**"விடியலை சபித்தபடியே எழும் அவன் நகரத்தில் வசிப்பதாலேயே அவனுடைய வாழ்வும் அவர்கள் தொற்றிக் கொள்ளும் மின்சார ரயிலைப் போலவே குறிப்பிட்ட பாதையிலேயே குறுகிவிடுகிறது"[11]**

என்கிறார் இறையன்பு.

கிராம மக்கள் கள்ளங்கபடமற்றவர்கள். உண்மையான அன்பு செலுத்தக் கூடியவர்கள். தங்களுக்கு இடையூறு செய்வோரையும் உபசரிக்கும் வெள்ளை

உள்ளம் கொண்டவர்கள். தங்களின் பிறப்பிடமான சித்தூர் கிராமத்தை விட்டுத் தங்களை விரட்ட வந்திருக்கும் அதிகாரிகளுக்கும்

**"தாங்கள் சேகரித்து வைத்திருந்த தேனையும் மக்காச்**

**சோளத்தில் சுட்டிருந்த மக்கி ரொட்டியையும் பருப்பு**

**கரைசலையும் பரிமாறி மகிழ்ந்தார்கள்"**[12]

என்று கூறுவதிலிருந்து கிராம மக்களின் வெள்ளந்தியான மனம் புலப்படுகின்றது.

வாழ்க்கை என்னும் சக்கரத்தைச் சிலர் மட்டுமே தகுந்த கட்டுக் கோப்புக்குள் செலுத்துகின்றனர். அன்றாட வாழ்க்கையில் நகரவாசிகளை விட கிராமவாசிகள் அன்பு காட்டுவதில் சிறந்து விளங்குகிறார்கள்.

**"அன்பு தான் நாம் வாழ்வதற்கும் பிறரை**

**வாழ்விப்பதற்கும் அடையாளமான பண்பு"**[13]

என்பார் வே. முத்துலஷ்மி. அன்பு செலுத்துவதும் மனிதர்களை நேசிப்பதும் சாமானிய மனிதர்களின் அடிப்படைப் பண்பு என்பதை,

**"கிராமப்புறங்களில்**

**மக்களின்**

**விழிகளில் எவ்வளவு**

**அன்பு வழிகிறது**

**கள்ளமில்லாத அந்த விழிகளில்**

**நல்லவர்கள் மீது**

**எத்தனை நம்பிக்கை"**[14]

என்று இறையன்பு குறிப்பிடுவதன் மூலம் அறியமுடிகிறது.

கிராமப்புற மக்களின் அன்பிற்கும் நகரத்திலிருப்போரின் அன்பிற்கும் இடையே வேறுபாடு இருக்கின்றது. கிராம மக்கள் எவரையும் எளிதில் நம்பி விடுபவராக வாழ்கிறார்கள். ஆனால் நகரத்தில் களவு போய்விடுமோ? எதுவும் விபரீதம் நிகழ்ந்து விடுமோ? என்னும் பயத்தினால் சன்னல்களும் கதவுகளும் சாத்தப்பட்டே இருக்கின்றன. நகரங்களில் அவை மூடியே கிடப்பதால் மக்கள் தொடர்பும் குறைகின்றது. நத்தை தனது கூட்டுக்குள் தன்னைப் புதைத்துக் கொள்வதைப் போல நகரத்தில் வாழ்பவர்கள் தங்கள் வாழ்க்கையைச் சுருக்கிக் கொண்டு வாழ்கிறார்கள்.

சித்தூர் கிராம மக்கள் பணத்தின் மீது பேராசை இல்லாதவர்களாக, உழைத்துப் பிழைப்பவர்களாக, சுயநலம் இல்லாதவர்களாக இருப்பதை,

**"இன்னாருக்கு இன்ன நிலம் என்று எந்த பத்திரமும் கிடையாது.**

**காலங்காலமாய்ப் பரம்பரை பரம்பரையாய் உழுது வருகின்ற நிலத்தில்**

**அந்தந்தக் குடும்பம் விவசாயம் செய்து கொள்ளும். இதில் எந்த பிரச்சனையும் அவர்களுக்கு வந்ததில்லை"[15]**

என்று இறையன்பு குறிப்பிடுவதிலிருந்து அறியமுடிகிறது.

நகர மக்கள் தங்களின் அடிப்படைத் தேவைகளுக்குக் கூட பிறரையே நம்பியிருக்கும் நிலையில் கிராம மக்கள் தங்கள் கைகளையே நம்பி வாழ்கின்றனர். இதனை,

**"இந்தக் கயிறு கூடத் தன் வீட்டு முன்னால் தானாக வளருகிற புளித்த கீரையை அறுத்துக் கட்டி நாளாவில் போட்டு அதன் நாரைப் பிரித்துத் திரித்ததுதான்"[16]**

என்ற கோவிந்தபாய் கூற்றினால் அறியமுடிகிறது.

நகர மக்களோ தன்னையும் நம்பாமல், இயற்கை அளித்த வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்ளாமல் தங்களையே அழித்துக் கொள்கின்றனர். அவர்கள் படித்து முடித்த பின்பு, கிடைத்த பணியைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள நினைப்பதில்லை.துரிதபணத்திற்கு ஆசைப்பட்டு கனவுகளிலும் கற்பனைகளிலுமே வாழ்கின்றனர்.

### 3.4. எண்ணமும் வாழ்வும்

"மனம் போல் வாழ்வு" என்பது மூத்தோர் வாக்கு. எண்ணங்கள் நன்றாக இருந்தால், நம் வாழ்வும் நன்றாக அமையும். எண்ணங்களால் மனித வாழ்க்கை தீர்மானிக்கப்படும் நிலையில், வாழ்க்கை என்பது உள்ளிருந்து வெளியே போகும் ஒரு செயல் என்கிறார் இறையன்பு.

**"நம் மனநிலையைப் பொறுத்த வரை வயோதிகம் நெருங்க நெருங்க நாம் மறுபடி குழந்தையாக மாறுகிறோம். தன்னுடைய பிள்ளைகள் தங்களுக்கு உணர்வுபூர்வமான துணையாக இருப்பார்கள் என்கிற எதிர்பார்ப்புகளில் தான் குடும்ப அமைப்பே ஏற்படுகின்றது"[17]**

என்கிறார் இறையன்பு.

### 3.5. திருமணம்

குடும்பம் என்ற கட்டடம் அழகாக, ஆழமாக அமைய திருமணம் எனும் அடித்தளம் பலமானதாய் அமைய வேண்டும். இருமனம் இணைவதே திருமணம். பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்டு ஆண், பெண் இணைகின்ற மணமுறையே திருமணம் ஆகும். இதனைத் தொல்காப்பியர்,

**"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப"[18]**

என்கிறார். திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்பது பெரியோர்களின் நம்பிக்கை. திருமணம் என்பது கவிதையும் இசையும் போன்று இனிமையானது மட்டுமல்ல. எதிர்பார்ப்புகள் நிறைந்ததும் தான் என்பதை,

**"திருமண வாழ்க்கை என்ப**
**கவிதையும்**
**இசையும் மட்டுமல்ல**
**பிணைப்பு வெறுமனே வருவதில்லை**
**எதிர்பார்ப்புகளை**
**இடுப்பில் ஏற்றிக் கொண்டுதான்**
**வருகிறது"[19]**

என்ற இறையன்புவின் வரிகள் உணர்த்துகின்றன.

## 3.6. காதல்

பெற்றோரால் பார்த்து நிச்சயிக்கப்பட்டாலும் காதலில் விழுந்து காதல் மணம் புரிந்தாலும் அன்பு ஒன்றே அதற்கு ஆதாரமாய் அமைய வேண்டும். காதல் என்பது விதிவசத்தால் ஓர் ஆணும் பெண்ணும் சந்தித்து உள்ளங்களைப் பரிமாறிக் கொள்ள நிகழக் கூடிய உன்னத செயலாகக் கருதப்பட்டது.

**"செம்புலப் பெயல் நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாங் கலந்தனவே"[20]**

இது சங்ககாலக் காதல். ஆனால் இன்றோ காதல் சாதியைப் பார்த்துத் தான் சிக்கலின்றி உருவாகின்றது. ஓர் ஆண் ஒரு பெண்ணைக் காதலிக்கத் தொடங்கும் முன் அவளைப் பற்றிய விவரங்களை முதலில் திரட்டுகின்றான். காதலி தன்னை விட வயதில் சிறியவளாக இருக்க வேண்டும் என்று விரும்பும் அவன், அவள் சாதியை அறிவதிலும் தீவிரங்காட்டுகின்றான். இதனை,

**"அழகும் அறிவும் பாரம்பரியச் சொத்து என்னும் பார்வையில் வளர்ந்த அவன், அவளைப் பற்றிய தகவல்களைப் பணியமைப்புப் பிரிவில் கண்டான். தன்னைக் காட்டிலும் இரண்டு வயது குறைவு என்பதில் கிடைத்த நிம்மதி, அவள் சாதியை அறிந்தபோது பறிபோனது"[21]**

"தெவச சாப்பாடு" எனும் தம் சிறுகதையில் இறையன்பு குறிப்பிடுவதிலிருந்து அறியமுடிகின்றது. இன்றைய இளைஞர்கள் காதல் கைகூடவில்லை எனில் கைரேகையாய் இருக்க வேண்டிய காதலைக் கைக்குட்டையாய் மாற்றவும் தயங்குவதில்லை என்பதையும்,

**"காதல் கடிதம் பரிமாறிக் கொண்டவர்கள்**

**திருமணப் பத்திரிக்கையும் பரிமாறிக் கொள்கிறார்கள்"[22]**

சுட்டிக்காட்ட ஆசிரியர் தவறவில்லை.

## 3.7. திருமண முறை

பெண்களைப் பெற்றவர்கள், தங்களின் தேவைகளைக் குறைத்துக் கொண்டு சேர்த்து வைப்பது, அவர்களை நல்ல இடத்தில் மணம் முடித்து வைக்கத்தான் என்பதை, சண்முகம் வீட்டினை வருமான வரி அதிகாரிகள் சோதனை செய்தபொழுது,

**"பீரோவிலிருந்து வெள்ளித்தட்டு, வெள்ளிக் குவளைகள் எல்லாம்**
**தனியாக எடுத்து வைக்கப்பட்டன. இந்தச் சனியனெல்லாம் வேணாம்.**
**உன் வீட்டுல இருந்தும் எதையும் கொண்டு வராதேன்னு எவ்வளவோ**
**தூரம் சொன்னேன். இந்தப் பாரிஜாதம் கேட்டுத் தொலைத்தாளா?**
**என்னோட பெண்ணுக்குக் குடுக்க வேணாமா என்று கேட்டாளே"[23]**

என்று சண்முகம் புலம்புவதிலிருந்து அறியமுடிகின்றது.

பெற்றோர் தங்களது கௌரவத்தை சமுதாயத்தில் நிலைநாட்டிக் கொள்ள, தங்களின் சக்திக்கு மீறி, ஆடம்பரமாக திருமணங்களைச் செய்விக்கின்றனர். ஆடம்பரமாகத் திருமணங்களை நடத்துவதன்மூலம் தங்களது செல்வாக்கை, பொருளாதாரத்தைச் சமுதாயத்திற்குப் பறைசாற்றுகின்றனர். பார்த்திபனின் திருமணத்திற்குச் சென்ற நசி,

**"பல விதமான ஐட்டங்கள் கூடிய சாப்பாடு... பாதிபேர் மிச்சம் வைத்து**
**இலையை மூடினர். தாம்பூலப் பையில் ஒரு வெள்ளிக் குங்குமச் சிமிழ்"[24]**

ஏன் இப்படி காசை வீணடிக்கின்றனர் என்று வருந்துவது, ஆசிரியரின் மனப்போக்கைப் பிரதிபலிப்பதாய் அமைகின்றது.

பெண்ணைப் பெற்றவர்கள் தன் பெண்ணை, சமுதாயத்தில் நல்ல நிலையில் இருக்கச் செய்ய,

**"எந்தச் சிரமமும் இல்லாமல்**
**வசதி வட்டத்துக்குள் ஐக்கியப்படுத்த**
**பெண்ணை**
**உயர் பதவியில் உள்ளவருக்குத்**
**திருமணம் மூலம் நிகழ்த்திக் காட்டத் தீர்மானிப்பார்கள்"[25]**

என்று கூறுவதிலிருந்து வசதி படைத்தவர்கள் எதையும் எந்த விலை கொடுத்தும் வாங்கி விடத் துணிவர் என்பது புலனாகின்றது.

திருமணம் ஆண்களுக்கு ஒரு நுழைவாயில். பெண்களுக்கு அதுவே பிரகாரம். நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்கு, திருமணம் வரமாக இல்லாமல் சாபமாகவே அமைகின்றது. இதனை,

**"திருமணம் என்பது கட்டாயச் சடங்கு**

**அதிகம் படிக்கிற பெண்களுக்கு**

**அதுவே தடை**

**மலர துணைபுரியும் சூரியனே**

**உச்சத்தில்**

**கருகச் செய்யும் கருணையின்மை போல"[26]**

என்ற வரிகளால் அறியலாம்.

திருமணம் என்பது பலருக்குத் தனிமையிலிருந்து தப்பித்துக் கொள்ள ஒரு வழியாக இருக்கிறது. உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள், திருமணத்தை தங்களின் தகுதியை, தரத்தை வெளியிடும் கருவியாக நினைப்பதை,

**"பல பெண்களுக்குத் தாலிக்கயிறு**

**கௌரவமான பிணைச் சங்கிலிதான்**

**திருமணம் ஆண்களுக்கு மூக்கணாங்கயிறு**

**பெண்களுக்கு அதுவே அலங்காரத் தாம்புக்கயிறு"[27]**

இறையன்பு படம்பிடித்துக் காட்டுகின்றார்.

## 3.8. கணவன் மனைவி உறவுநிலை

"நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்" என்பர். உறவுகளில் பிடிப்புடன் இருக்க வேண்டிய உறவு கணவன் மனைவி உறவு. தம்பதிகளுக்கிடையே பரந்த மனமும் அடுத்தவர்களை அவர் தம் குறைபாடுகளோடு ஏற்றுக் கொள்ளும் உள்ளமும் இருந்தால் தாம்பத்தியம் என்பது போராட்டமாக இல்லாமல் நீரோட்டமாக அமையும் என்று கூறும் ஆசிரியர், கணவன் என்பவன் எப்படி இருக்க வேண்டும் என்பதைக் கூறும்பொழுது "சித்ரஸ்ரீ" என்ற பாத்திரத்தின் வாயிலாக வெளிப்படுத்துகின்றார்.

**"நானிருக்கும் பிடிப்பில் தான் அவர் உயிரோடு இருக்கிறார்.**

**தெய்வமே எனக்கு சேவகம் செய்யும் இவரது சக்தியை**

**உறிஞ்சி இவரை நீ இழுத்துக் கொள்ளாதே"[28]**

என்று சித்ரஸ்ரீ புலம்புவதிலிருந்து கணவன் மனைவியின் ஆழமான அன்பு புலப்படுகின்றது.

ஒரு பெண் தன் கணவனுக்கு தாரமாய், தாதியாய், தாயாய், எல்லாமுமாய் விளங்குவது போலவே, மனைவிக்கு உடல் நலக்குறை ஏற்படும் பொழுது அவள் கணவன் அவளுக்கு உற்ற தோழனாய், தாதியாய், மகனாய், தாயாய் பரிமளிக்கிறான் என்று கூறுவதிலிருந்து பெண் மட்டுமின்றி ஆணும் ஒருவருக்கொருவர் ஆதரவாய் இருப்பதும் இருக்க வேண்டும் என்பதும் புலனாகின்றது.

சமுதாயத்தில் மனைவி கணவனைச் சார்ந்தே இருக்கிறாள். இருக்க வேண்டும் என்று சமுதாயம் விழைகின்றது. கணவனை விட மனைவி படித்தவளாய், சிந்திப்பவளாய், சமுதாய முன்னேற்றத்தில் ஆர்வம் உள்ளவளாய் இருந்தால் அதனை எந்த கணவனும் விரும்புவதில்லை. இதனை “ஆத்தங்கரை ஓரம்” நாவலில் இடம்பெறும் சுனில்-ராதா படங்கர் கதாபாத்திரத்தின் வாயிலாக இறையன்பு வெளிப்படுத்துகின்றார். அணை கட்டுவதை எதிர்க்கும் ராதாபடங்கரை அவளது கணவர் சுனில், “அணைகட்டும் பிரச்சனைக்கு எதிராகக் குரல் கொடுப்பதை நிறுத்திக் கொள்” என்று அறிவுறுத்துகிறார். அதனை ஏற்க மறுக்கும் தன் மனைவியை,

> **“பொருளாதாரம் படித்த நான் சொல்வதைக் கேள். நான் அரசுப் பணியில் இல்லாமல் இருந்தால் இங்கு இப்படி ஒரு வீடும் வசதியும் தொடர்ந்து பராமரிக்க முடியுமா உன்னால்? நீயே எண்ணிப்பார்”[29]**

என்று சாடுகின்றார்.

மனைவியை மதிக்கும் ஆண்களும் சமுதாயத்தில் ஓரிருவர் இருக்கத்தான் செய்கின்றனர். இதனை ஆத்தங்கரை ஓரம் நாவலில் வரும் சுதீர்-யூதிகா பாத்திரங்களின் வாயிலாக ஆசிரியர் படம்பிடித்துக் காட்டுகின்றார். கணவன் கொண்ட காரியம் யாவிலும் கை கொடுத்து அவனுக்குப் பக்கபலமாய் இருக்கும் யூதிகா,

> **“நான் உங்கள் பிரச்சனைகளுக்கு நடுவே இன்னொரு பிரச்சனையாய் பாரமாய் அழுத்த விரும்பவில்லை. என்னால் எதையாவது குறைக்க முடியுமா என்று மட்டுமே பரிசீலிக்க விரும்புகிறேன்”[30]**

என்று சுதீரிடம் கூறுவதிலிருந்தும்

> **“சுதீர் துணிச்சலா இருக்க அவரோட மனைவி யூதிகா தான் காரணம். எந்த இடத்திலும் அட்ஜஸ்ட் பண்ணிக்கிறாங்க.”[31]**

என்று சந்தீப், நிதின் இருவரின் கூற்றிலிருந்தும் ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின் ஒரு பெண் இருப்பாள் என்பது உறுதியாகின்றது.

**"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**

**பண்பும் பயனும் அது"[32]**

என்பார் வள்ளுவர். ஆனால் இன்று குடும்பங்களில் அன்பு கூட தவணை முறையில் தான் தரப்படுகின்றது.

**"பல வீடுகளில்**

**கணவன் மனைவி வல்லரசாவதால்**

**குழந்தைகள் குட்டி நாடுகளாய்**

**குழப்பத்தில்"[33]**

திளைப்பதால் அவர்கள் இல்லறத்திலேயே பிடிப்பு இல்லாமல் துறவிகள் போல வாழ எத்தனிக்கின்றனர்.

**"நான் சரி. நீ சரியில்லை என்கின்ற மனப்பான்மை**

**உறவுகளை ஓட்டை போட்டு விடச் செய்யும்"[34]**

என்கிறார் இறையன்பு. குடும்பம் கோவிலாக இருந்த நிலை மாறி ஒவ்வொரு குடும்பமும் தீவாகி விட்டது.

**"குடும்பமற்ற வாழ்வு பாதுகாப்பானது. பாதுகாப்புக்காக**

**ஏற்படுத்திக் கொள்கிற தயாரிப்புகள் மூலம் வருகின்ற**

**பாதுகாப்பின்மைகளே அதிகம்"[35]**

எனும் நிலை உருவாகிவிட்டதால் "சாகாவரம்" நசியும் குடும்பம் என்ற வட்டத்துக்குள் வர மறுப்பதாக ஆசிரியர் கூறுகின்றார்.

## 3.9. இல்லறம் நல்லறம்

ஆண், பெண் என்ற இரண்டு உருளையில் நடக்கும் இன்ப வாழ்க்கை தான் இல்லறம்.

**"உவந்து ஒருவன் வாழ்க்கை சரியாய் நடத்த**

**உதவுபவள் பெரும்பா"லும் மனைவி ஆவாள்**

**அவளாலே மணவாளன் ஒழுங்கு பெற்றான்**

**அவளாலே மணவாளன் சக்தி பெற்றான்"[36]**

என்பது பெர்னாட்ஷாவின் பொன்மொழி. இல்லறமானது நல்லறமாக வேண்டுமானால் தம்பதியர் அன்புடனும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டும் விட்டுக்கொடுத்தும் வாழுதல் அவசியமாகின்றது.

**"பெண்ணால் விதையாக இருக்க முடிந்தால் மட்டுமே ஆணால் மலராக இருக்க முடியும். பெண் தன்னை அதிகம் வெளிப்படுத்திக் கொள்ளாமல் பூமிக்குள் ஆழமாகப் புதைந்து புதைந்து வேர்களைப் பரப்பியதால் ஆண் உயரமான உச்சாணிக் கொம்புகளில் மொக்குவிட்டு மலர முடிந்தது"[37]**

என்று இறையன்பு கூறுவதிலிருந்து நதியாய் கணவன் இருக்கும்பொழுது மனைவி பாறையாக இல்லாமல் சருகாய் சலசலப்பின்றி நீரின் போக்கிலே போனால் இல்லறம் நல்லறம் ஆகும் என்பது புலனாகின்றது.

## 3.10. தாய்மை

காதலால் ஒருவனைக் கரம் பிடித்து, அவன் காரியம் யாவிலும் கை கொடுத்து இல்வாழ்க்கையின் அச்சாணியாய் விளங்குபவள் பெண். ஒவ்வொரு பெண்ணும் திருமணம் முடிந்ததும் தாய்மை என்னும் உன்னத நிலையை அடைவதையே விரும்புகிறாள். இறைவன் எல்லா இடங்களிலும் இருக்க முடியாது என்பதற்காகவே தாயை ஒவ்வொரு வீட்டிலும் படைத்ததாகக் குரான் சொல்கின்றது. இறையன்புவும், தாயை ஈரெழுத்துத் திருக்குறள் என்கிறார். நாம் மீண்டும் நினைத்தாலும் ஏறி அமரமுடியாத சிம்மாசனம் தாயின் கருப்பை. தாயின் அரவணைப்பைக் குறிப்பிடுகையில்,

**"தாயின் மடியில் தலை வைத்துப் படுத்தால் மறுபடி**

**கருப்பைக்குள் நுழைந்த திருப்தியும் பாதுகாப்பும் கிடைக்கும்"[38]**

என்கிறார் இறையன்பு.

**"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்"[39]**

தாயாக "சாகாவரத்தில்" வரும் கோபியின் தாய், கோபி கலெக்டர் ஆனதில் மனநிறைவு கொள்கிறாள்.

**"பெரிய மகன் இன்ஜினியரிங், சின்ன மகன் மெடிக்கல்.**

**அவங்க ரெண்டு பேரும் மெரிட்ல சேர்ந்தாங்க"[40]**

என்று பாரிஜாதம் சொல்வதிலிருந்து பிள்ளைகளால் பெற்றோர்கள் பெருமைப்படுவதைப் படம் பிடித்துக் காட்டுகின்றார் ஆசிரியர்.

**"தாய் என்பவள்**
**மெழுகுவர்த்தியைப் போன்றவள்**
**ஒளியைத் தந்து**
**உருகுவதில் மட்டுமல்ல**
**தேவையில்லாமல்**
**தீண்டுபவர்களைச்**

**சுட்டு விடுவதிலும் தான்"[41]**

என்று கூறுவதன் மூலம் அநீதியைக் கண்டு பொங்கி எழுபவள் தாய் என்பது புலனாகின்றது. தாய்க்கும் தாயன்புக்கும் முன்னால் எதுவுமே ஈடாகாது. தன்னுயிரையும் பொருட்படுத்தாது தன் குழந்தைகளை கண்ணுக்குள் வைத்துக் காக்கும் தாய்மார்கள் தங்களுக்கு ஒரு துன்பம் வந்தபொழுது தங்களை கவனிக்காமல் பணமே குறியாய், வெளிநாடுகளில் வேலை செய்யும் பிள்ளைகளை நினைத்து,

**"அம்மாவின் உயிரை விட பெரிய ப்ராஜக்டா அது. எப்படியெல்லாம்**
**தூக்கி சீராட்டி வளர்த்தேன். ராத்திரியில் இருமினா கூட**
**டாக்டர்கிட்ட தூக்கிக்கிட்டு ஓடுவேன் விடிய விடிய முழிச்சி**
**பத்துப் போட்டு காய்ச்சல் அதிகமாகமப் பாத்துக்குவேனே"[42]**

இப்ப என்ன பாக்க வரலையே என்று புலம்புவதிலிருந்தும், இராணுவத்தில் பணிபுரிந்து வீரமரணம் அடைந்த கனகாம்பாளின் மகன் சடலம், அவர்களது இல்லத்திற்குக் கொண்டு வரப்பட்டு மாலை, மரியாதை செய்யப்பட்ட பொழுது,

**"இந்த மரியாதையெல்லாம் இல்லாமலிருந்தால் இன்னும் கொஞ்சம்**
**நேரம் தன் மகனின் முகத்தைப் பார்த்திருக்கலாமே"[43]**

என்று ஏங்குவதிலிருந்தும் இருவேறு தாய்மார்களின் மனவோட்டத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றார் ஆசிரியர்.

தாய் தன் குழந்தைக்குப் பாடும் தாலாட்டில் தன் குலப்பெருமையைப் பாடுவதோடு நாட்டின் சிறப்பை, வீரத்தை, வளர்ச்சியைப் பற்றி பாட வேண்டும் என்று கூறும் ஆசிரியர், ஐந்தில் விதைப்பதே விருட்சமாகும் என்கிறார். தாய்மார்களே,

**"உங்கள் குழந்தைகளுக்கு**
**அயோத்தி ராமனைப் பற்றிக்**
**கூறுவதோடு நிறுத்திக் கொள்ளாதீர்கள்**
**சர்.சி.வி. ராமனைப் பற்றிக்**
**ஆழமாய் விதையூன்றுங்கள்.**
**ஐயப்பனின்**
**கதையை மட்டுமல்ல**
**ஐன்ஸ்டினின்**
**ஆய்வைப் பற்றியும்**
**அறிவைப் புகட்டுங்கள்**
**தூங்கும் பொழுது கூட**

**இதயத்தில்**

**விழிப்புணர்வு வர வேண்டும்"[44]**

வருங்கால சமுதாயத் தூண்களாக விளங்கும் குழந்தைகளுக்கு நேர்மை, உண்மை, உழைப்பு, வீரம், அறிவியல் ஆய்வு போன்றவற்றைத் தாய்ப்பாலோடு கலந்து ஊட்டுங்கள் என்கிறார் ஆசிரியர்.

**3.11. தந்தை**

தாயோடு அறுசுவை போம். தந்தையோடு கல்வி போம் என்பது சான்றோர் வாக்கு. குழந்தைகள் நற்பழக்கங்களையும் ஒழுக்கங்களையும் தன் தாய் தந்தையிடம் இருந்தே கற்றுக் கொள்கின்றனர். "வைகை மீனின்" நாயகன் நேர்மை, உயிரிரக்கம், அறிவுத்தேடல், தொழிலில் அக்கறை போன்ற நற்பண்புகளைத் தன் தந்தையிடமே கற்றான் என்பதை,

**"கடின உழைப்பையும்**

**கடனற்ற வாழ்வையும்**

**கனிவான நடத்தையையும்**

**அவரிடமிருந்து**

**கைக்குட்டையைப் போல**

**ஒற்றிக் கொண்டான்"[45]**

என்று ஆசிரியர் சுட்டிக் காட்டுகின்றார்.

தன் மனைவி இறந்த பிறகு தன்னுடைய குழந்தைகளுக்குத் தாயாகவும் இருந்து பாதுகாக்கும் கடமை உள்ளவராகத் தந்தை இருத்தலை "சமர்ப்பணம்" என்ற கதை காட்டுகின்றது.

**"இறுதி வரை அம்மா இல்லாத குறை அவனுக்குத் தெரியாதபடி**

**தாய்க்குத் தாயாக மகனுக்குப் பால் சொரிந்து ஊட்டினார்.**

**வயது வளர வளரத் தோழனாக மாறினார். அவரது சுண்டு**

**விரலே அவனுக்குப் போதி மரம்."[46]**

"சிறகுகள் வேண்டும்" என்னும் சிறுகதையில், ஒரு தாய் இரண்டாவதும் பெண் குழந்தையாகப் பிறந்ததால் அக்குழந்தை மீது வெறுப்பு கொண்டு இருந்ததை எண்ணி குழந்தை வருந்துகிற சூழலில், தந்தை இரு குழந்தையையும் ஒன்றாகவே பாவித்துக் கடமையாற்றுவதை,

**"தன்னைக் கட்டிக் கொண்ட மார்க்கண்டேயனாய் அவனுக்கு**

**அந்தக் குழந்தை தோன்ற அதன் வேண்டுகோள்கள் எதையும்**

**நிராகரிக்காமல் இருந்தான்"[47]**

என்று இறையன்பு கூறுவதிலிருந்து பெண் குழந்தைகள் புறக்கணிக்கப்படுவது பெரிதும் பெண்களாலேயே என்பது புலனாகின்றது.

தோளுக்கு மிஞ்சிய மகன் தோழன் என்பதற்கேற்ப, சாகாவரம் நசிகேதனின் தந்தை அவனுக்குத் தோழனாகவே விளங்குகிறார். திருமணம் வேண்டாம் என மறுக்கும் மகன் நசியை, திருமணத்துக்கு வற்புறுத்தும் அவனது அம்மா,

**"இதோபாருப்பா. நான் பாக்கறப் பெண்ணைத்தான் நீ கல்யாணம் பண்ணிக்கணும்னு எந்தக் கட்டாயமும் இல்லை. உனக்கு யாரைப் பிடிச்சாலும் சொல்லு. நான் பண்ணி வைக்கிறேன்"**[48]

என்று சொல்வதிலிருந்து பிள்ளைகளுக்காகப் பெற்றோர் வளைந்து கொடுக்கவும் செய்வர் என்பது புலனாகின்றது. அணைக் கட்டுக்கு எதிராக பழங்குடியினரைத் தூண்டி விட்டதாக சிமன் கைது செய்யப்பட்டபொழுது கோவிந்தபாய்,

**"இப்படிப்பட்ட மகனைப் பெற நான் புண்ணியம் பண்ணியிருக்கனும். ஊருக்காகத் தன்னையே தியாகம் செய்து விட்டான்"**[49]

என்று பெருமையோடு ஈன்ற பொழுதின் பெரிதுவந்தார்.

பிள்ளைகள் சுகப்பட, பெற்றோர் தம் சுகங்களைத் தியாகம் செய்கின்றனர். தான் படிக்காத நிலையிலும் தன் பிள்ளைகளாவது படித்து நல்ல நிலைக்கு வர வேண்டும் என்று எண்ணுவது இயல்பானதே. ஆனால் பெற்றோர்கள் பிள்ளைகளின் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாய் இருக்க வேண்டுமே அன்றி இடைஞ்சலாக இருக்கக் கூடாது. பிள்ளைகளின் ஆர்வத்தை முளையிலேயே கிள்ளி விடக் கூடாது.

**"வண்ணத்துப் பூச்சி எங்க போயிருக்கும் என்றதற்கு வேறு இடத்துக்குப் போயிருக்கும். போய் வேலையைப் பாருடா"**[50]

என்று விரட்டும் தந்தையிடம் கேள்வியை எதிர்கொள்ளும் நேர்மை இல்லை என்பதும்

**"கல்லூரி நாட்களில் கவிதையை இரசிக்கும் போது நடைமுறை வாழ்க்கைக்கு இதெல்லாம் ஒத்து வராது"**[51]

என்று தந்தை திட்டியது, அவனுக்கு ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல இருந்தது என்று கூறுவதிலிருந்து குழந்தைகளின் ஆர்வத்தை அகற்றும் விதத்திலன்றித் தூண்டும் விதமாய் பெற்றோர் இருக்க வேண்டும் என்பதும் புலனாகின்றது.

வயதான காலத்தில் பெற்றோரைத் தன்னுடன் வைத்து பராமரிப்பது ஒவ்வொரு பிள்ளையின் கடமை. அக்கடமையைச் செய்ய மகன் விரும்பியபொழுதும் அவனுடன் சென்று வாழ்வதை பெரும்பாலான பெற்றோர் விரும்புவதில்லை. அதற்கு அவர்களின் சுயமரியாதையும் கௌரவமுமே காரணங்களாய் அமைகின்றன.

**"மகனுடன் சென்று வசிப்பதா**
**பசித்தாலும்**
**புலி புல்லைப் புசிப்பதா**
**என்று பலமுறை யோசிக்க**
**சுயமரியாதை**
**அவமரியாதை செய்யாத மகனிடம்**
**அறவே தேவையில்லை"**[52]

என்று பெற்றோர்களிடம் யார் சொல்வது? பெற்றோர்கள் பிள்ளையுடன் சென்று வசிக்காததற்கு, அவர்கள் வாழ்ந்த ஊரை, வீட்டைப் பிரிய விரும்பாததே காரணம் என்பதை,

**"இலயிப்பும் ஈடுபாடும் உள்ள இடத்தை விட்டுப் பிரிவது**
**கூட்டை விட்டு உயிர் பிரிவதற்குச் சமம்"**[53]

என்று அமெரிக்காவிற்கு அழைக்கும் மகனிடம் தஞ்சை கணபதிபிள்ளைக் கூறுவதன் மூலம் அறியலாம்.

## 3.12. உடை

ஆடையில்லா மனிதன் அரை மனிதன் என்றும் ஆள் பாதி ஆடை பாதி என்றும் ஆடையின் தேவையையும் அதன் முக்கியத்துவத்தையும் பழமொழிகள் நன்றாக வெளிப்படுத்துகின்றன. எனவே தான் மனிதனின் அடிப்படை உரிமையில் உணவுடன் உடையும் முக்கிய இடத்தை வகிக்கிறது. ஒருவரின் ஆடையை வைத்தே அவரின் குண நலன்களை அறியலாம். பொதுவாகவே ஆண்களின் உடை அவர்களின் நேர்மையைப் புலப்படுத்துவதாய் அமையும். அதிகமாய்ப் புதிது இல்லாத சற்று கசங்கிய, கை பிரிந்த சட்டையைப் போட்டுக் கொண்டிருந்தால் அவர் அப்படி இப்படி சம்பாதிக்கவில்லை என்பது சொல்லாமலே புரியும். பெண்களோ நாகரிகம் என்ற பெயரில் மறைக்க வேண்டிய உடலை வெளிப்படுத்திக் காட்டிப் பெருமைப்படவே நினைக்கின்றனர். இதனை,

**"அடுத்த சுற்றில் மேற்கத்திய உடை தலையை செம்பழுப்பாக்கி**
**டீ சர்ட் பேண்ட் என நடந்து வந்தாள். இந்த உடைகள் மறைப்பதைக்**
**காட்டிலும் வெளிப்படுத்துபவை தான் அதிகம். விந்தி விந்தி**

**நடப்பது தான் ஒயிலான நடையாம்"**[54]

என்ற வரிகளின் வாயிலாக அறியலாம்.

வசதி படைத்தவர்கள் தேவைக்கன்றி ஆசைக்கு அணியும் இயல்புடையராய் இருக்கின்றனர்.பெற்றோர், பிள்ளைகளுக்குத் தன் விருப்பப்படி ஆடை வாங்கிக் கொடுத்த நிலைமாறி, தற்பொழுது குழந்தைகள் தங்களுக்குத் தேவையானதை தாங்களே வாங்கிக் கொள்கின்றனர். அதோடுமட்டுமின்றி பெற்றோர்களையும் தங்களுக்கு ஏற்றாற் போல மாற்ற முயலுகின்றனர். இதனை,

**"பெற்றோர்களைக் கடைக்கு அழைத்துச் சென்று நாங்கள் வாங்கித்**
**தருவதைத் தான் நீங்க அணிய வேண்டும்"**[55]

என்றும்

**"இனிமேல் இந்த வேஷ்டியெல்லாம் வேணாம். புதுசா**
**பேண்ட் சபாரி வாங்கித் தரேன். அததான் போட்டுக்கணும்"**[56]

என்றும் குழந்தைகள் சொல்வதால் அறிய முடிகின்றது.

வறுமையில் உழலுபவர்களுக்குப் புதிய உடை கிடைப்பது அவர்கள் வாழும் பொழுது இல்லை. இறந்த பிறகுதான். மனிதர்களின் உயிர் பிரிந்த பிறகு போலி கௌரவத்திற்காக கோடி போடப்படும் அவல நிலை இன்றும் தொடர்வதை நாம் காணமுடிகின்றது.

### 3.13. உணவு

உயிர் வாழ்வதற்கு அவசியத் தேவை உணவு. அதனாலேயே பாரதியும்,

**"தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்"** [57]

என்றார்.

பசி வந்திட பத்தும் பறந்து போகும். பசியின் கொடுமையை உணர்ந்ததாலேயே இறையன்புவும் மனிதர்கள் அனைவரும் பசித்தவனைப் பற்றி சிந்திக்க வேண்டும். அப்பொழுதுதான் பசிப்பிணி அகல வழி பிறக்கும் என்னும் உயரிய சிந்தனையை வெளிப்படுத்துகின்றார். இயற்கையை ஏன் இரசிக்கவில்லை என்ற தனது நண்பனின் கேள்விக்கு பதிலாக,

**"பசி அவர்களது நரகம்**
**உணவு சொர்க்கம்**
**என வாழும்**
**இதயங்களுக்காக**
**இரக்கப்பட்டதால்**
**இயற்கையை என்னால்**
**அனுபவிக்க முடியவில்லை"** [58]

என்று கூறுவதன் மூலம் மனித உரிமைச் சிந்தனை வெளிப்படுவதை அறிய முடிகிறது. சாப்பிடுவது உடலுக்கு ஆற்றலையும் உள்ளத்திற்குப் புத்துணர்ச்சியையும் அளிக்கின்ற தவம். அதனாலேயே,

**"சாப்பிடுவதைச் சிரத்தையோடும் நெறியோடும் செய்கின்றவன் மற்ற அனைத்து செயல்களையுமே ஒழுங்காகச் செய்யக் கற்றுக் கொள்வான்"[59]**

என்கிறார் இறையன்பு.

நம் உணர்வுகளை வெளிப்படுத்தும் சாதனமாக உணவையே நாம் பயன்படுத்துகிறோம். உணவைப் புறக்கணிப்பதன் மூலம் கோபத்தை வெளிப்படுத்துகிறோம். சாப்பிடுவது சாதாரண செயலல்ல. தினமும் நிகழ்வதாலேயே அது சாதாரண செயலாகிட முடியாது. தினமும் உதிப்பதாலேயே சூரியன் அற்பமானதாகி விடாது. உணவின் மகத்துவத்தை,

**"உணவும் உணர்வும் நாணயத்தின் இரு பக்கங்களாகும்**

**பசியைப் பொறுப்பவன் பாரில் உயர்வான்**

**ருசியைத் தவிர்ப்பவன் தரணியை ஆள்வான்**

**சரியான உணவு உண்பவன்**

**அரியாசனத்தில் அமர்பவனாவான்"[60]**

என்று கூறும் இறையன்பு, உணவு மருந்தாகவும் அமையும் என்பதை,

**"அற்றது போற்றி உணின்"[61]**

என்ற குறள் வழி நின்று,

**"குறைந்த உணவு இளமை நிறைக்கும்**

**மெதுவாய் அருந்த மருந்தாய் மாறும்"[62]**

என்று வலியுறுத்துகின்றார். உடலுக்கும் உள்ளத்திற்கும் வேண்டிய வலிமையைக் கொடுப்பது உணவாகும். ஆகவே உணவு உண்ணுதலை விழிப்புணர்வோடு தவம் போல மேற்கொள்ள வேண்டும் என்கிறார் இறையன்பு.

## 3.14. விருந்தோம்பல்

தமிழரின் தலைசிறந்த பண்புகளுள் விருந்தோம்பலும் ஒன்று. புதிதாக வருபவர்கள் "விருந்து" என்றழைக்கப்பட்டனர். அப்படி வந்த விருந்தினரைப் போற்றுபவன் வாழ்க்கை கெடுவதில்லை என்பதை,

**"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**

**பருவந்து பாழ்படுதல் இன்று"[63]**

என்று குறள் உணர்த்துகின்றது. கிராமத்துக்கு அதிகாரியாக வந்த தோழர், சுவையின்றி சத்தற்ற உணவு உண்பதைக் கண்ட கிராமவாசி ஒருவர்,

**"எங்கள் வீட்டிலிருந்து**
**உங்களுக்கு**
**தினமும் நான் உணவு**
**அனுப்பி வைக்கின்றேன்"[64]**

என்று கூறுவதிலிருந்து கிராம மக்களின் விருந்தோம்பும் இயல்பு புலனாகின்றது.

பழங்குடியினர், தாங்கள் உண்ணும் உணவுப் பொருட்களைப் பாசத்தோடு பரிமாறும்பொழுது அது அமுதமாகவே விருந்தினருக்கு அமையும் என்பதை,

**"கம்பை அரைத்துப் பண்ணிய கூழில் தயிரை விட்டுக் கரைத்து,**
**வீட்டுக்கு முன்னால் நீள நீளமாய்க் காயத்திருந்த**
**சிவப்பு படிந்த வெண்டைக்காய் கறியை தட்டில்**
**வைத்து சிமனுக்கு முன் இருத்தினர்" [65]**

என்ற வரிகள் சுட்டுகின்றன. உணவின் சுவை பசியின் அடர்த்தியிலும் சாப்பிடுகின்ற மனச்சூழலிலும் தான் கலந்திருக்கிறது. பகிர்கின்ற பொழுது உணவின் சுவை அதிகரிக்கிறது என்பதை,

**"பகிர்ந்து உண்டால் கூழும் இனிக்கும்**
**தனியே உண்டால் விருந்தும் கசக்கும்"[66]**

என்ற வரிகள் உணர்த்துகின்றன. சப்பாத்திக்குத் தொட்டுக் கொள்ள அச்சாரும் பச்சை வெங்காயமும் பருப்பும் நன்றாக இருந்தது என்றும், வறட்டு டீயில் எலுமிச்சம் பழச்சாறு கலந்து துவர்ப்பு ருசியில் பல விஷயங்களை பரிமாறினர் என்றும் தீயில் சுட்டு வைத்த இளங்கதிர்களும் கம்பங்கூழும் பழங்குடியினரின் உணவு என்றும் "ஆத்தங்கரை ஓரம்" நாவலில் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

## 4. நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும்

பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் சமுதாய தேவைகளின் அடிப்படையில் தோன்றியதாகும்.

**"நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு அவை சமுதாயத்தால் பாதுகாக்கப்படுகின்றன. தனி மனிதனின் பழக்கம் பல மனிதர்களால் பின்பற்றப்படுகிற பொழுது அது அச்சமுதாயத்தின் வழக்கமாக மாறி விடுகிறது." [67]**

சித்தூர் கிராம பழங்குடியினரிடையே சில பழக்க வழக்கங்கள் வேரூன்றி இருந்து வந்திருக்கின்றன என்பதை,

**"ஒவ்வொரு வருஷமும் கார்த்திகை மாதம் பொங்கல் வைத்துக்**
**கொண்டாடுவதைப் பழக்கமாக அவ்வூர்ப் பெண்கள் வைத்திருந்தனர்.**
**முழுநிலவு நாட்களில் ஒட்டு மொத்த மக்களும் கூடி தீமூட்டிப் பாடி,**
**கொண்டாடுகின்ற வழக்கம் இருந்து வந்துள்ளது. புலியைத்**

**தேவதையாக எண்ணி வழிபடுவது அவர்களின் வழக்கமாகும்"[68]**

ஆத்தங்கரை ஓரம் நாவல் சுட்டிக்காட்டுகின்றது. திருமண சமயத்தில் உள்ளூரிலேயே பெண் எடுக்கிற, கொடுக்கிற பழக்கம் இருந்துள்ளது. ஆனால் வரனுக்கு அன்றி மணப்பெண்ணுக்குப் பரிசத் தொகை வழங்கி மணம் முடிக்கும் வழக்கம் இருந்ததை,

**"இருபது வெள்ளாடுகளையும் பத்து மூட்டை**
**மக்காச் சோளத்தையும் கொடுத்து விட்டுப்**
**பெண் எடுத்துக் கொண்டான்"[69]**

என்று கூறுவதிலிருந்து சித்தூர் மக்களின் பழக்கவழக்கம் புலனாகின்றது. அது காலப்போக்கில் மாறிய நிலையை இப்போது காண்கிறோம்.

அருணாச்சல பிரதேச மக்கள் தலாய் லாமா போன்ற மதத் தலைவர்களின் ஆசிர்வாதம் கிடைத்தால் தங்களுக்குப் படிப்பு நன்றாக வரும் என்று நம்பினர். இதனை "தும்டன்" என்ற பாத்திரத்தின் வாயிலாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார். தலாய் லாமா,

**"பலமுறை என் தலையை தொட்டு ஓ மாராப்பச ந தீ தீ தீ .. .. ..**
**என்று உச்சரிக்கக் கற்றுக்கொடுத்தார்"[70]**

அதன் பிறகுதான் படிப்பு நன்றாக வந்தது என்று கூறுவதிலிருந்து அவர்களின் நம்பிக்கை புலனாகின்றது.

**"எங்கிருந்தோ வந்த பூனை, ஒரு வீட்டில் குட்டிப்போட்டால்கூடிய**
**சீக்கிரம் அவர்கள் வீட்டில் குழந்தை துள்ளி விளையாடப் போகிறது"[71]**

என்றும்

**"ஊரை விட்டுப் போகும் முன் வீட்டில் ஆலமரத்தடிகல்லுக்கு**
**மஞ்சள் குங்குமம் பூசிச் சென்றால் புருஷன் திரும்பி வருவான்னு"[72]**

பொம்பளைங்க நினைப்பதும் சில இடங்களில் வழக்கமாயிருந்தது.

திருமணத்தில் தாலி என்பது தேவை இல்லை. திருமணத்திற்கு நம்பிக்கையே அடிப்படை என்பதை,

**"என் மீது உனக்கு**
**இருக்கும்**
**நம்பிக்கையை**
**ஒரு கயிற்றினால் தான்**
**உத்தரவாதமளிக்கப்பட**
**வேண்டியதில்லை"[73]**

என்ற வரிகள் சுட்டிக்காட்டுகின்றன.

மூட நம்பிக்கையால் மனித உயிர்கள் பறிபோவதை ஆத்தங்கரை ஓரம் - கோகுல் பாத்திரத்தின் வழி இறையன்பு குறிப்பிடுகின்றார். அணையைக் கட்ட வரும் ஒப்பந்தக்காரர்களின்,

**"உயிர்பலி கொடுத்தாதான் அணை, பாலம்**
**எல்லாம் உறுதியாயிருக்கும்"**[74]

மூடநம்பிக்கையால்கோகுல் என்ற புத்தி சுவாதீனமில்லாதவன் பலியிடப்படுவதைக் குறிப்பிடும் ஆசிரியர், தன் வேலைத் திறனில் நம்பிக்கையின்றி உயிர்பலி இடுவோரைச் சாடுகின்றார். மற்றொரு இடத்தில்,

**"மண் சோறு சாப்பிடுகிறாயே. அது மகிழ்ச்சி தரும் என்றால் தட்டினைப் படைக்கிற மூளையை இறைவன் மனிதனுக்குத் தந்திருக்க மாட்டானே"**[75]

என்று கேட்பதிலிருந்தும்

**"புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைத் தாத்தா போல, அம்மா போல என்று ஒப்பிட்டுக் கூறுகிறீர்களே? அனாதைக் குழந்தைகளை எடுத்து வளர்க்கும் போது எப்படிக் குறிப்பிடுவீர்கள்"**[76]

என்று வினவுவதிலிருந்து மூடநம்பிக்கைக் கொண்டோர்களைச் சாடுகின்றார்.

## 4.1. நாகரிகம்

நாகரிகம் என்பது நகர மக்களின் திருந்திய வாழ்க்கை. நாகரிக முன்னேற்றமே ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பர். தற்போது நாகரிகம் என்பது ஆடைக் குறைப்பில் தான் வெளிப்படுகின்றது என்பதை,

**"நாகரிகங்கள்**
**ஆத்தங்கரையில் பிறந்ததனால் தானோ**
**என்னவோ இன்றும்**
**நீச்சலுடையிலேயே இருக்கின்றன"** [77]

என்று வேதனைப்படுகிறார் இறையன்பு. பக்கத்து வீட்டு முகங்கள் கூட யாருக்கும் தெரிவதில்லை. முகவரியால் முகங்களைத் தொலைப்பதே, எழும்பி நிற்கும் நாகரிகத்திற்கான அடையாளமாக இருக்கின்றது. உணர்வுகளை மறைப்பதே நாகரிகம் என்று கருதப்படும் இக்காலத்தில், கிராம மக்கள் வெள்ளந்தியாக இருப்பது அவர்களின் இயல்பைக் காட்டுவதாக உள்ளது. இதனை,

**"நாகரிகம் என்கிற பெயரில் தன்னுடைய உணர்வுகளைஅவனுக்கு மறைத்துப் பழக்கமில்லை. கோபம் வருகின்றபோது கோபமாகவே மாறும் மனோபாவம் கொண்டவன் நிதின்"**[78]

என்று கூறுவதிலிருந்து அறிய முடிகிறது.

## 4.2. பண்பாடு

பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல். ஒரு சமுதாயத்தில் உள்ள மக்கள் வாழ்க்கை நடத்தும் முறையே பண்பாடு ஆகும். எண்ணிப்பார்க்க முடியாத நெடுங்காலத்திற்கு முன் தோன்றிய இச்சமுதாய வாழ்விற்கு அடிப்படை பண்பாடே. பண்பாட்டுடன் தொடர்பு கொண்டதே பழமை. பழமையைக் கட்டிக் காப்பது தனிப்பெருமைதான். இருப்பினும் பட்டிமன்றத்திலும் ஏன் பழமை? புது நிகழ்வுகளுக்கும் வாழ்வு கொடுக்கலாமே என்பதை,

**"எத்தனையோ தொல்லைகள்**
**எல்லையைக்**
**கடந்து கொண்டிருக்க**
**இன்னும் நமது**
**இலக்கியச் சொற்பொழிவாளர்களுக்கு**
**கண்ணகி , சீதை**
**கற்பைப் பற்றியே சந்தேகம்**
**திரும்பத் திரும்ப வந்த வண்ணமிருக்கிறது"**[79]

என்ற வரிகளால் சுட்டுகின்றார் இறையன்பு.

## 4.3. நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் உள்ள வேறுபாடு

இலக்கணப் பிழையின்றிப் பேசுவதும் துப்புரவாயிருப்பதும் நன்றாய் சமைத்து உண்பதும் பிறருக்குத் தீங்கு செய்யாமையும் நாகரிகக் கூறுகளாம். நாகரிகத்தின் உயர்ந்த நிலையே பண்பாடயினும் நாகரிகமின்றியும் பண்பாடுண்டு. காட்டில் தங்கும் முற்றுந்துறந்த முழுமுனிவர் ஆடையின்றியும் நீராடாதும் மண்ணில் இருப்பர். ஆயினும் அவர் பண்பாட்டில் தலை சிறந்தவர். பண்டைக் காலத்தில் நாகரிகம் என்னும் சொல்லையே பண்பாடென்னும் பொருளிலும் ஆண்டனர். அதனால், பண்பாட்டுக் குணமான, "கண்ணோட்டத்தை" நாகரிகம் என்றார் திருவள்ளுவர்.

**"பெயக் கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க**
**நாகரிகம் வேண்டு பவர்"**[80]

திருந்திய நிலை என்னும் பொதுக் கருத்தில் நாகரிகமும் பண்பாடும் ஒன்றாதலைக் காணலாம்.

## 5. கல்வி

எக்காலத்திலும் உயர்ந்த ஒன்றாகக் கருதப்படுவது கல்வி. கல்விதான் மனிதனின் ஆற்றலை வெளிக் கொணர்கிறது. அறிவும் ஆற்றலும் சார்ந்த நிலையே கல்வி. நாட்டின் வளர்ச்சியைத் தீர்மானிப்பதும் கல்வியே. அதனால் தான் சுவாமி விவேகானந்தரும்,

**"எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ,**

**மனவலிமையை வளர்க்கச் செய்யுமோ, விரிந்தஅறிவைத்**

**தருமோ, ஒருவனைத் தன்னுடைய சுய வலிமை கொண்டு**

**நிற்கச் செய்யுமோ அத்தகைய கல்வி தான் நமக்குத் தேவை"[81]**

என்கிறார்.

காலத்தால் அழியாத செல்வமான கல்வியை நாம் கற்பதன் மூலம் அது ஏழேழ் பிறவிக்கும் தொடரும் என்பதாலேயே ,

**"பிச்சை புக்காயினும் கற்றல் மிக இனிது"[82]**

என்கின்றனர். கல்வி என்றால் கற்பது. கற்றுக் கொண்டே இருப்பது. கல்விக்கு விளக்கம் கூறுமிடத்து இறையன்பு,

**"அறியாமையை அறிவதே**

**கல்வியின் முதல்படி.**

**அறிந்தவை அனைத்தும்**

**அறியாமையே**

**என்பதே அதன் கடைசிப்படி"[83]**

என்று படிப்பின் படிகளை வரிசைப்படுத்துகிறார்.

"அகல உழுவதைவிட ஆழ உழுவதே மேல்" என்ற பழமொழிக்கு ஏற்ப கற்கும் கல்வி ஆழ்மனதில் நிற்கக் கூடியதாக இருக்க "கசடறக் கற்க" என்கிறது குறள். படிப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை,

**"விழிப்புணர்வு விதைகளை ஊன்றி**

**நம்பிக்கை நாற்றுகளை நட்டு**

**சந்தேகக் களையகற்றி**

**உற்சாக உரமிட்டு**

**அறிவை**

**அறுவடை செய்யும் படிப்பு"[84]**

என்று பண்பட்ட வார்த்தைகளில் இறையன்பு எடுத்துரைக்கின்றார்.

கல்வி என்பது கிராமம், நகரம் என்ற வேறுபாடு இல்லாமல் எல்லோருக்கும் தேவையான ஒன்று. கல்வியின் பலன் மேன்மையான, மகிழ்ச்சியான வாழ்வை அடைவதே. கிராமங்களில் ஆரம்பப் பள்ளிகளில் எப்பொழுதாவதுதான் வகுப்புகள் நடக்கும். உயர்கல்விக்கு நீண்ட தூரம் பயணப்பட வேண்டிய சூழலில் அக்கல்வி அவர்களுக்கு ஆடம்பரமாகவே தோன்றியது.

அவ்வுலகம் நாவலில், திரிவிக்ரமனின் நட்பு சுக்கிரனுக்குக் கிடைக்கிறது. திரிவிக்ரமனின் வழிகாட்டுதலில் படித்து வெற்றிபெற்ற சுக்கிரனிடம் திரிவிக்ரமன்,

**"படிப்பு ஒன்னை வச்சித்தான் நாம்ப முன்னேறனும் புரியுதா. நம்மை யாரும் புறக்கணிக்க முடியாதுங்கற அளவுக்கு வளர்ந்து காட்டணும்"[85]**

என்று கூறுவதிலிருந்து படிப்பின் அவசியத்தை இறையன்பு உணர்த்துகின்றார்.

ஆண்களுக்கு கல்வியில் இருந்த சுதந்திரம் பெண்களுக்கு, குறிப்பாக கிராம பெண்களுக்கு கிடைப்பதில்லை. விழிப்புணர்வு இல்லாதவர்கள் என்பதாலும் கல்வியறிவு இல்லாதவர்கள் என்பதாலும் அவர்கள் வஞ்சிக்கப் - படுகிறார்கள். படிக்க வேண்டும் என்ற ஆசையால் ஆத்தங்கரை ஓரம்-மிருதுளா,

**"கண்ணாலம் பண்ணின பிறகாவது நீங்க எனக்குக் கத்துக் குடுங்க. நானு எழுதப் படிக்கத் தெரிஞ்சிக்கறேன்"[86]**

என்று சிமனிடம் கூறுவதிலிருந்து பெண்கள் படிக்க விரும்புவதை அறியலாம்.

## 5.1. இன்றைய கல்வி நிலையும் கல்வி நிறுவனங்களும்

கல்வி வாழ்க்கைக்கான கல்வியாக இல்லாமல் வயிற்றுக்கான கல்வியாகவே உள்ளது. இன்றைய கல்வி முறை பாடப் புத்தகத்தை மட்டுமே வேதப் புத்தகமாய் மாற்றுகிறது. மதிப்பெண் மட்டுமே இங்கு அறிவின் அளவுகோலாய் மாறிவிட்டது. மனப்பாடத்தையே அட்சயப் பாத்திரமாய் நினைக்கும் அவலம் நிலவுகிறது. குழந்தைகளிடம் கல்வியைக் கொண்டு செல்ல வேண்டிய அணுகுமுறையை,

**"விரல்களை வெட்டி நகத்தை அழகாக்கும்**
**அவசரமல்ல படிப்பு அது**
**விருப்பத்தை விதைத்து மெதுவாய்க் கிளைத்து**
**கனிகளைத் தாங்கும் துடிப்பு"[87]**

என்று பதிவு செய்கிறார் இறையன்பு.

இன்று பணத்தினால் கிடைக்காத கௌரவம், படிப்பைத் தருவதால் கிடைக்கிறது என்று வர்த்தகர்கள் இப்போது கவனம் செலுத்துவது கல்வித் துறையில் தான். இப்படிப் பட்டவர்களால் உருவாக்கப்படும் கல்விக் கூடங்களில் வளரும் குழந்தைகள்,

**"கறிக்கோழி வளர்ப்பது போல்**
**கண்காணிக்கப்படுகிறது"[88]**

என்று வேதனைப்படுகின்றார் இறையன்பு. இன்றைய கல்விக்கூடங்கள் கல்வியை வெறும் விளம்பரத்துக்காகப் பொருள் ஈட்டும் இடமாக மாற்றி விட்டதால் அவை ஆன்மா இல்லாத கல்லறைகளாக மாறிவிட்டன என்பதை,

**"மூளையைப் பலப்படுத்தும் முனைப்பில்**
**இதயத்தை பலவீனப்படுத்தி விடுகிறார்கள்"[89]**

என்று வேதனைப்படுகின்றார்.

## 6. சமுதாயத்தில் பெண்கள்

மனித இனத்தின் தோற்றத்திற்கு அடிப்படைக் காரணமாய்த் திகழ்பவர்கள் பெண்கள். ஆண்களின் வாழ்வில் ஒரு பகுதியாக அமையும் பெண்களைப் பற்றி ஒவ்வொரு சிந்தனையாளரும் தத்தம் சிந்தனைக்கேற்பவும் தாம்கொண்ட கொள்கைக்கேற்பவும் தங்கள் படைப்புகளில் பதிவு செய்துள்ளனர். இறையன்புவும் பெண்கள் பற்றிய தமது எண்ணத்தைத் தம் படைப்புகள் பலவற்றிலும் பதிவு செய்துள்ளார். மனித உயிர்களில் ஆண்களை உயர்வாகவும் பெண்களைத் தாழ்வாகவும் குறிக்கும் நிலை பல ஆண்டுகளாகவே தொடர்கிறது என்பதை,

**"ஆணாய் பிறப்பது அருமை**

**பெண்ணாய்ப் பிறப்பது எருமை"**[90]

என்று நிர்மலா மோகன் சுட்டுகின்றார். ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதை பாரதியார்,

**"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்**

**அறிவில் ஓங்கி இவ்வையம் தழைக்குமாம்"**[91]

என்று வலியுறுத்துகின்றார்.

திருமணம், வாழ்வில் ஒரு முறை மட்டுமே வரக்கூடிய வசந்த காலம். பெண் பார்க்கும் படலத்தில் அவள் உடலில் ஐ.எஸ்.ஐ. முத்திரை தவிர அனைத்தும் ஆராயப்படும் அவல நிலை இன்றுள்ளது. ஆணாதிக்கச் சமூகத்தில் திருமணம் என்ற சடங்கால் தொலைந்து போகும் பெண்ணின் அவலத்தை, தங்கள் வாழ்க்கைக்குத் துணையாக வரும் கணவனே அவர்களுக்குச் சுமையாக அமைவதையும் அவனையும் சேர்த்து மனைவி சுமப்பதை,

**"முதுகில் பாரம்**
**கனக்க**
**பகிர்ந்து கொள்ள**
**ஆள் தேடினேன்**
**கிடைத்தான்**
**இப்போது**
**அவனையும்**
**சேர்த்துச் சுமக்கிறேன்"**[92]

தம் கவிதையில் இறையன்பு பதிவு செய்கிறார்.

திருமணத்திற்குப் பின் பெண்கள், குடும்பம் என்ற சூழலில் நுழைந்ததும் தொட்டிச் செடிகளாய்த் தன் வேர்களைச் சுருக்கிக் கொள்கின்றனர்.

பெரும்பாலான பெண்கள் படிப்பதையும் நிறுத்தி விடுகின்றனர் என்று வேதனைப்படும் இறையன்பு, பணி அவர்களுக்கு சலுகையாக இல்லாமல் சுமையாக மாறி தொல்லைப்படுத்துகிறது என்கிறார். திருமணம் என்பது பெண்களின் கைகளிலிருந்து கால்களுக்கு மாற்றப்பட்ட விலங்கு என்பதை,

**"உங்கள் கைகளிலிருந்த விலங்கு**
**கால்களுக்கு**
**மாற்றப்பட்டிக்கிறது"[93]**

என்று சுட்டிக்காட்டுகின்றார்.

பெண்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள் கிடைக்காமல் இன்றும் பல பெண்கள் அடிமையாய் உள்ளனர். பெண்களின் கையிலிருந்து ஊதுகுழலைப் பிடுங்கிவிட்டு புல்லாங்குழலைத் தந்ததும் கூட இன்னும் அடுப்பூதத்தான் அனுமதித்திருக்கிறார்கள் என்று வருந்தும் இறையன்பு,

**"உதிர்வதற்கு முன்னாலேயே**
**கழுத்துக்கள்**
**துண்டிக்கப்பட்டு**
**மலர் வளையத்திலிருக்கும்**
**மலர்களே**
**உங்கள் மரணத்திற்கும்**
**சேர்த்துதானா**
**மௌன அஞ்சலி"[94]**

என்று கேட்பதன் மூலம் மௌனமே பெண்ணுரிமைகள் பறிக்கப்பட காரணம் என்று சுட்டுகின்றார். பெண்கள் என்னதான் மேடையேறி பெண் உரிமைப் பற்றிப் பேசினாலும் துணைக்கு அழைத்துச் செல்ல துணைவன் வரும் வரை காத்திருந்து செல்லக் கூடிய அவல நிலையையும்,

**"மேடையிலே ஏறி**
**பெண்ணுரிமை பற்றிப் பேசிவிட்டு**
**துணைக்குத் துணைவன்**
**வரும் வரை**
**கூட்டம் முடிந்தும்**
**காத்திருக்கத்தானே செய்கிறீர்கள்"[95]**

என்று சுட்டிக் காட்ட ஆசிரியர் தவறவில்லை.

பெண்கள் தங்களின் உரிமைகளுக்காகத் தாங்களே போராடித்தான் தீர வேண்டும். போராடத் தயங்கினால் இருக்கும் இடம் தெரியாமல் மண்ணோடு மண்ணாவார்கள். தனக்குரிய வேலைகளை, கடமைகளை, உரிமைகளை வேறு

யாரும் தீர்மானிக்க பெண்கள் விடக் கூடாது. பெண்ணியம் என்பது ஆண்களை எதிர்ப்பதும் ஆண்களை விட மேலோங்கி இருப்பதும் என்பது தவறான கருத்தாகும். ஆண், பெண் இருவரும் தங்களது எண்ணங்களுக்குத் தகுந்தாற்போல சமூகப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண போராட வேண்டும். அப்போராட்டத்தில் ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் உறுதுணையாய் இருக்க வேண்டும் என்பதே இறையன்புவின் எண்ணம்.

## 7. சாதி வேறுபாடு

தீப்போல் வெந்தழிக்கக் கூடிய சாதியால் இச்சமுதாயம் பல்வேறு சிக்கல்களுக்கு ஆளாகி வந்துள்ளது. "இட்டார், இடாதார் "என்று சாதி இரண்டென்பார் தமிழ் மூதாட்டி. "சாதி ஆவதேதடா" என்று ஆவேசப்பட்டார் சிவவாக்கியார்.

**"சாதிகள் இல்லையடி பாப்பா"**[96]

என்று வளரும் தலைமுறைக்கு வழிகாட்டினார் பாரதி.

**"சாதி இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே"** [97]

என நெஞ்சு பொறுக்காமல் தன் வேதனையைப் பதிவு செய்தார் பாரதிதாசன்.

பாரதி, பாரதிதாசனை அடியொற்றி இறையன்புவும் கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்த்துப் புதியதோர் உலகம் படைக்க, தடையாய் விளங்கும் சாதியைத் தகர்த்தெறியத் தவறவில்லை.

சாதிகள் இல்லையடி பாப்பா என்ற பாட்டைப் படித்த பின்னும் சாதியை அறிய மக்கள் ஆர்வம் கொண்டுள்ளதை இறையன்பு கூர்ந்து நோக்கிப் பதிவு செய்துள்ளார். கிராமத்து மக்கள் சாதியைப் பற்றி நேரடியாகக் கேட்பர். நகரத்து மக்கள் நாகரிகப் போர்வையில் சுற்றி வளைத்து அறிய முற்படுவர். குழந்தை பிறந்து அதற்கு அம்மை குத்துவதற்கு முன்பே சாதி முத்திரைக் குத்தப்படும் கொடுமையும் இங்குதான் நடந்து வருகின்றது என்று வருந்தும் ஆசிரியர், தன் சாதியைப் பற்றி யார் கேட்டாலும்,

**"இனிமையான மனிதாபிமானமுள்ள**
**மனிதர்கள்**
**அனைவருமே என் சாதி"**[98]

என்று கூறுவதிலிருந்து அவரின் உயர்ந்த பண்பு தெரிகிறது.

சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட நிலையில் உள்ள மக்கள் இன்றும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். உயர் சாதியினருக்கு முன் மேல்துண்டு போடாமலும் காலில் செருப்பு அணியாமலும் வாழும் வர்க்கம் இருப்பதையும்

கல்வியால் அவர்கள் வாழ்க்கைத் தரம் உயர்ந்தபொழுதும் அவர்களைத் தங்களுக்குச் சமமாய் நடத்த தயங்கும் உயர் சாதியினர்,

**“நேத்து வரைக்கும் எங்க முன்னாடி செருப்பு போட்டுகிட்டு நடக்க பயந்தவங்க இன்னிக்கி சரிசமமா உட்கார்ந்தா ஏத்துக்கறது கஷ்டம்”[99]**

என்று சொல்லும் பொழுது, அறிவுரை கூறும் பெரியவர், இப்ப சென்னையில் பக்கத்து வீட்ல இருக்கிறவன் என்ன சாதின்னு தெரியுமா? எல்லாம் கொஞ்ச நாள்ல சரியாயிடும் என்று கூறுகிறார். இதிலிருந்து சாதிப் பிரச்சனை நகரை விட கிராமத்தில் அதிகம் என்பது புலனாகின்றது. தீண்டத்தகாதவர்களுக்குத் தனியாக குவளைகள் வைக்கப்பட்டிருந்ததையும்

**“உங்க ஊர்ல ரெட்டைக் குவளை முறை இருக்கா?**
**அரசாங்கம் நடவடிக்கை எடுத்திடும்னு தெரிஞ்சதால**
**ஒரே ராத்திரியில காகிதக் குவளை வாங்கி வச்சிட்டாங்க”[100]**

அறிய முடிகின்றது. மற்றொரு இடத்தில் இரட்டைக் குவளைப் பிரச்சனையை, இரண்டே குவளை இருப்பதே பிரச்சனை என்று கிண்டலாகக் கூறுகின்றார் இறையன்பு.

**“கிராமத்தில் ஒரே ஒரு தேநீர்க்கடை**
**கடையில் இரண்டே இரண்டு குவளைகள்**
**நிறையக் கூட்டம்**
**அப்போதுதான் புரிந்தது**
**போதிய குவளைகள் இல்லாததால் மட்டுமே**
**பிரச்சனை என்று.**
**அது இரண்டு குவளை பிரச்சனை**
**இரட்டைக் குவளைப் பிரச்சனையல்ல”[101]**

சேரியில் வாழும் மக்கள் செருப்பு அணியக் கூடாது. மேல்துண்டு அணியக் கூடாது என்பதுபோன்று, அவர்கள் ஆண் நாயும் வளர்க்கக் கூடாது என்ற கட்டுப்பாடு இருப்பதையும் சுட்டிக் காட்டுகின்றார் ஆசிரியர்.

### 8. சமயம்

மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி உண்டு. அதுவே இறைவன். இறைவன் உலகைப் படைத்தவன். மனிதனோ கற்களை பலவாகக் கொண்டு மயங்குகிறான்.

**“இங்கே**
**கற்கள் ஒன்றுதான்**
**உருவங்கள் மட்டுமே**

**வெவ்வேறாக"**[102]

என்று சமயத்திற்கு வடிவம் கொடுக்கிறார் இறையன்பு. ஆன்மீகம் என்பது நம்மையும் நம்மைச் சுற்றியுள்ளவர்களையும் அன்பு மயமான உலகில் ஆழ்த்துவதற்கான சின்னப் பயணத்தில் தான் தொடங்குகிறது என்கிறார் இறையன்பு. தனக்குள் இருக்கும் இறைமையை உணர்வதும் தன்னை எல்லோரிடமும் காண்பதுமே ஆன்மீகம் ஆகும்.

**"நேர்மையின்மை**
**ஏமாற்று வேலை**
**பேராசை**
**வன்மம்**
**பொறாமை**
**திருட்டு**
**அதீத சுயநலம்"**[103]

எனும் எண்ணற்ற கடப்பாரைகளைக் கொண்டு, நமக்குள் இருக்கும் இறைத் தன்மையை நாம் தொடர்ந்து கொன்று கொண்டிருக்கிறோம் என்று குறிப்பிடுவதிலிருந்து கடவுள் மனிதனுள் இருப்பதை இறையன்பு வெளிப்படுத்துகின்றார்.

ஆன்மீகம் என்ற பெயரில் கடவுளிடம் பேரம் பேசுவதையும் உயிர்பலி இடுவதையும் சாடும் இறையன்பு, கடவுள் பெயரைச் சொல்லி ஏமாற்றுவோரைச் சுட்டிக் காட்டும் பொழுது,

**"கடவுள் இல்லை**
**என்பதைக் கூட**
**பிள்ளையார் சுழி**
**போட்டுத்தான்**
**எழுதுகிறார்கள்"**[104]

என்று கூறுவதன் மூலம் பகுத்தறிவுக்கு விளக்கம் தருகின்றார். இதனால் மதம் மார்க்கமாக இல்லாமல் மூர்க்கமாக மாறும்பொழுதே சிக்கல் உருவாகின்றது என்பது புலனாகின்றது.

## 9. அரசாங்கம்

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பதை உணர்ந்த மனிதன் சமூகத்தை அமைத்தான். தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள அரசினை உருவாக்கினான். அரசியல் என்ற சொல்லிற்கு அரசாட்சிமுறை என்று அகராதி பொருள் கூறுகிறது. ஆளுங்கட்சியும் அதன் குறைகளைச் சுட்டிக்காட்ட ஏற்படுத்தப்பட்ட எதிர்க்கட்சியும் இன்றைய சூழலில் சந்தர்ப்பவாத அரசியலையே

நடத்துகின்றன. எலி, அணில், யானை முதலிய மிருகங்களின் வழி, இன்றைய அரசியல் சூழலை மிக எதார்த்தமாக ஆசிரியர் கூறிச் செல்கிறார்.

**“மனிதர்களுக்கு**
**எப்போதுமே தங்களைத் தவிர வேறு யாரும்**
**பதுக்கினால் பிடிக்காது பிடுங்கிவிடுவார்கள்”**[105]

என்று எலி கூறுவதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார். அபகரிப்பது மட்டுமல்ல. திணிப்பதும் திருட்டுதான் என்கிறார் ஆசிரியர்.

## 9.1. அரசாங்க ஊழியர்

அரசின் நலத்திட்டங்கள் மக்களைச் சென்றடைய பாலமாய் இருப்பவர் அரசாங்க ஊழியர்கள்தான். ஆனால் அவர்களோ மக்களுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகளைப் பறித்துக் கொண்டு தங்களை வளப்படுத்திக் கொள்கின்றனர். இதனை,

**“வறட்சி நிவாரணப் பணியை**
**ஏப்பம் விடுகின்ற**
**அலுவலரைப் போல்**
**எழுத்து**
**குண்டு குண்டாய் இருந்தது”**[106]

என்று சுட்டுகின்றார். நகராட்சி சாலைகள் குண்டும் குழியுமாக இருப்பதை,

**“கண்கள்**
**நலிவடைந்த நகராட்சி சாலை போல**
**குழி விழுந்தன”**[107]

என்று சமுதாய அமைப்பையும் குழிவிழுந்த கண்ணையும் ஒப்பிட்டுக் கூறுகிறார்.

## 9.2. நிர்வாகம்

நிர்வாகத்திற்கென்று தனித்தன்மை இருக்கிறது. அதிகாரி, தங்கள் குறைகளைக் கேட்டாலே 50% பிரச்சனை தீர்ந்ததாக நிம்மதி அடையும் நிறைவு நம் மக்களிடம் உண்டு.

**“தோரணையும் அதிகாரமும் அமைச்சரைக் காட்டிலும்**
**அதிகமாக வாய்க்கப் பெற்றவர்களே அமைச்சர்களின்**
**நேர்முக உதவியாளராக அருளப் பெற்றவர்கள்”**[108]

அதிகாரிகள் எப்பொழுதும் எளிமையாய் அணுகுவதற்கு எளிதாய் இருக்க வேண்டும்.

**"காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்**

**மீக்கூறும் மன்னன் நிலம்"[109]**

என்று குறள் மன்னனுக்குக் கூறியது அதிகாரிகளுக்கும் பொருந்தும். அதிகாரி எப்படி இருக்க வேண்டும் என்பதை,

**"பொது மக்களுடைய கோபம் மிகும் போதெல்லாம்**

**பொங்குகிற பாலை அணைக்கின்ற தண்ணீரைப் போல"[110]**

ஆகிறவர்களே தகுதியுள்ள அதிகாரிகள் என்றும்

**"மக்களுக்காக அவர்களுடன் தங்கி பணியாற்றுவதும்**

**சாமானியர் போல பழகி, அணுகுவதற்கு எளிதாய் சுதீர் போல**

**அதிகாரிகள் இருந்தால் நாடு விரைவில் முன்னேறி விடும்"[111]**

என்றும் கூறுவதிலிருந்து புலனாகின்றது.

**"பொறுப்பும் பொறுமையும் கைகோர்க்கும் போது நமது**

**அதிகாரம் சுமையாக இல்லாமல் இறகாக இருக்கும்"[112]**

என்கிறார் ஆசிரியர்.

வளமையை, நிறைவை, மகிழ்ச்சியை, செல்வத்தைப் பகிர்ந்து கொள்வதில்தான் உண்மையான பொதுவுடைமை அடங்கியிருக்கிறது. செய்யும் பணி அனைத்துமே உன்னதமானதுதான். செருப்புத் தைக்கும் தொழிலாளியின் உயர்வை,

**"காலில் முள் குத்துகிற போதுதான்**

**செருப்புத் தொழிலாளியின்**

**வியர்வை**

**நமக்குப் புரிகின்றது"[113]**

என்ற வரிகள் உணர்த்துகின்றன. கழனியில் களை எடுப்பவருக்கும் கம்ப்யூட்டர் இயக்குபவருக்கும் ஒரே மரியாதை தரப்பட்டால்தான் பொதுவுடைமை பூத்ததாக நாம் மகிழ முடியும் என்கிறார் இறையன்பு.

## 9.3. வாக்காளர்

சுதந்திர இந்தியாவில் ஐந்தாண்டுக்கு ஒரு முறை தேர்தல் திருவிழா வந்து கொண்டுதான் இருக்கின்றது. ஒவ்வொரு முறையும் வேட்பாளர்கள் வெற்றி பெற ஓட்டுப் போடும் வாக்காளர்கள் எப்பொழுதும் தோல்வியை மட்டும் சந்திக்கும் அவல நிலைத் தொடர்வதையும் தேர்தல் வரைதான் கொள்கை என்று, எந்த கொள்கையுமற்ற அரசியல் கட்சிகளையும்

**“தேர்தல் முடிந்தது**

**கூட்டணி முறிந்தது”[114]**

என்றுசாடுகிறார் இறையன்பு. நமது அரசு நிர்வாகம் அடிமைகளை விருப்பத்தோடு உற்பத்தி செய்கின்றது. குணம் மாறாது என்ற பொருளை உணர்த்த நாய் வாலை நிமிர்த்த முடியாது என்ற பழமொழியை அரசியல் அங்கத்துக்கு குறியீடாக்குகின்றார். பல்லியின் வால் அடிக்கடி அறுபடுவதை,

**“தலைக்குத் தரும் மகத்துவத்தை வாலுக்குத்**

**தந்தால் இப்படித் தான் நிகழும்”[115]**

என்று குறிப்பிடும் ஆசிரியர், அரசியலில் கால் பிடிப்பதும் வால் பிடிப்பதும் வழக்கமான ஒன்று என்கிறார்.

தினை விதைத்தவன் தினை அறுப்பான் என்ற பழமொழிக்கு ஏற்ப இன்றைய அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் தாங்கள் நினைத்த இடத்தை அடைய கொடுத்த விலையை, பதவியை அடைந்ததும் வசூலிக்க, “கையூட்டு” என்ற ஆயுதத்தைக் கையிலெடுக்கின்றனர். நேர்மையான ஊழலற்ற சமுதாயம் உருவாக விரும்புவோர் முதலில் தன்னை அத்தகையவராக மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லையேல் மற்றவரைக் கண்டிக்க முடியாது என்பதை,

**“கையைக் கழுவாமலேயே**

**முகத்தைக் கழுவ முற்படுவதனால்**

**அழுக்கு இன்னும்**

**அப்புறப்படுத்தப்படாமலேயே**

**இருக்கிறது”[116]**

என்ற வரிகளால் சுட்டிக்காட்டுகின்றார்.

## 9.4. வேலை வாய்ப்பு

வருங்கால இந்தியாவின் தூண்களாக விளங்க வேண்டிய இளைஞர்களிடம் திறமை அதிகமாக இருந்தும் பொறுமை இல்லை. படித்து முடித்தவுடன் யாரிடமாவது பரிந்துரைக் கடிதம் வாங்கி, நல்ல வேலையில் அமர வேண்டும் என்று துடிக்கின்றனர்.

**“தென்னையைப் போன்றது வாழ்க்கை. இளநீர் வேண்டுமென்றால்**

**நிச்சயம் தென்னை மரம் ஏற வேண்டும். முயற்சியற்றவன்இளநீரைப்**

**பெற முடியாததைப் போல முயற்சியற்றவன்வாழ்க்கை வீணாகிவிடும்”[117]**

என்கிறார் இறையன்பு. வேலைக்காகப் பிறரை அண்டிப் பிழைக்காமல் தன் திறமையையும் முயற்சியையும் கொண்டு உழைக்கும்பொழுது நாமே பிறருக்கு

வேலை தர முடியும். நம்மால் முடியும் என்ற நம்பிக்கையே மெழுகுவர்த்தியாய் வழிகாட்டும் என்பதை,

**“அறிவு என்பது யாருக்கும் பாரம்பரியமானதல்ல**
**திறமை என்பது யாருடையதனிச் சொத்துமில்லை**
**தன்னம்பிக்கை என்னும் மெழுகுவர்த்தியை**
**மட்டும் கையில் ஏந்தினால் போதும்”[118]**

என்ற வரிகள் சுட்டிக்காட்டுகின்றன. கிராமப்புற மக்கள் அன்றாடம் கிடைக்கும் சிறு சிறு வேலைகளைச் செய்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் திருப்தி அடைகின்றனர். மகிழ்ச்சியாய் வாழுகின்றனர். நகரத்தில் உள்ளவனோ வாய்ப்புக்காக காத்திருந்து வறிதே காலத்தைக் கழிக்கிறான். தான் செய்யும் தொழில் எதுவாக இருப்பினும் அதை மகிழ்ச்சியுடனும் ஈடுபாட்டுடனும் செய்யும்பொழுது முழுபலனும் நமக்கும் கிடைக்கும். செய்யும் தொழிலைத் தெய்வமாக மதிக்கும் தன்மை, அப்பணியில் நேர்மை, அர்ப்பணிப்புத் தன்மை போன்றவை ஒருவனை உலகுக்கு இன்னாரென்று காட்டும் என்பதை,

**“அவன் அதிகாரம் புரியாத மனிதாபிமானி**
**அரிதாரம் பூசாத அதிகாரி”[119]**

என்ற வரிகள் விளக்குகின்றன.

ஒருவன் தன் தொழிலை, அதற்குக் காரணமானவற்றை நேசிக்க வேண்டும். செய்கிற பணியை மகிழ்ச்சியோடு செய்யும்பொழுது அது சுமையாக இல்லாமல் சுகமாக மாறும் என்பதை “வழுக்கைமுகம்” கதை மூலம் வெளிப்படுத்துகிறார் ஆசிரியர். முடிதிருத்தும் கலைஞனாக விளங்கும் கதைத் தலைவன்,

**“தன் கடைக்கு நீளமான முடியுடன் வருபவர்களைக்**
**காணும் போது மனம் துள்ளி குதிப்பான். கொத்தான**
**முடிகளை வெட்டும் போதும் அவை சுருண்டு**
**விழுவதிலும் அவன் சந்தோஷப்பட்டு போவான்”[120]**

என்னும் வரிகள் தொழிலின் மீது அவன் கொண்ட ஈடுபாட்டைப் புலப்படுத்துவதாக அமைகின்றது.

## 10. குழந்தைத் தொழிலாளி

குழந்தை என்றால் 14 வயதுக்குட்பட்டவர்கள் என்பது நம்முடைய சட்டம். ஆனால் 18 வயது வரை ஒரு மனிதன் குழந்தையாகவே கருதப்பட வேண்டும்.

**“18 வயதில் தான் முழுமையான மன வளர்ச்சியும், உடல் வலிமையும்,**
**சுயமாக முடிவெடுக்கும் மூளை பலமும் கிடைக்கப் பெறும்”[121]**

என்று ஐக்கிய நாட்டு குழந்தைகள் உரிமைப் பிரகடனம் கூறுகின்றது.

குழந்தைத் தொழிலாளி என்றவுடன் நம் நினைவுக்கு வருவது பட்டாசு தொழிற்சாலைதான். ஆனால் அதனுடன் தறி நெய்யும் நெசவுத் தொழிலும் அபாயகரமானது என்பது பலருக்குத் தெரிவதில்லை. காஞ்சிபுரத்தில் குழந்தைத் தொழிலாளர்களை நெசவுத் தொழிலில் உட்படுத்தும் நிலை இருந்தது.

புத்தக மூட்டைக்குப் பதில் பொதி மூட்டையும் எழுதுகோலுக்குப் பதில் எஞ்சின் ஆயிலையும் சுமக்கும் குழந்தைத் தொழிலாளர்களின் நிலையினைக் கண்டு மனம் வருந்தி, அவர்களின் கண்ணீரைத் துடைக்கும் பணியில் தன்னை முழுமையாய் ஈடுபடுத்திக் கொண்டவர் இறையன்பு.

14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை மீட்டு அவர்களுக்குக் கல்வி புகட்ட "நிலவொளி இயக்கம்" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கி வைத்தார். படித்த வேலையில்லா பட்டதாரிகளை அக்குழந்தைகளின் கல்விக் கண்ணைத் திறந்து வைக்கும் ஆசானாக்கினார். தொழிலாளர்களாக இருந்து மாணவர்களாக மாறியபொழுது அவர்களிடம் அற்புதமான ஈடுபாட்டைப் பார்க்க முடிந்தது. வழக்கமான மாணவர்களைக் காட்டிலும் அவர்கள் தீவிரமாகப் படித்தனர். இதிலிருந்து,

> **"முதலில் கிடைத்து இடையில் மறுக்கப்படும் ஒன்று திரும்பக் கிடைக்கும் போது அதன் மகத்துவம் அதிகரிக்கிறது"**[122]

என்பதும்

> **"மறுக்கப்பட்டது கிடைக்கும் போது அதன் அருமை அழகாக அறியப்படுகிறது"**[123]

என்பதும் புலனாகின்றது.

> **"குழந்தைத் தொழிலாளர் முறையில் படிப்பு மட்டுமே அவர்களிடம் இருந்து களவாடப்படுவதில்லை.அவர்களின் குழந்தைத் தனம் திருடப்படுகிறபோது அது அவர்களை "போன்சாய்" மரங்களைப் போல குறுக வைத்து விடுகின்றது"**[124]

என்கிறார் இறையன்பு.

மனித நேயத்திற்கு ஆட்பட்டவன் மனித சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் நிலையில் தன்னையே அர்ப்பணித்துக் கொள்ளுவான். குழந்தைகளைக் கையாளும் விதத்தில் நாம் பின்தங்கி இருக்கிறோம் என்று வருந்தும் இறையன்பு, ஆள்கிற பொருளாய் கைக்குழந்தையைக் கையாள்பவரைக் கண்டனம் செய்கின்றார். வளரும் இளஞ்செடியின் கிளைகளை முறிப்பது போல இங்கே குழந்தைகள் கல்விக் கூடங்களுக்கு அனுப்பப்படாமல் தொழிலாளர்களாக ஆக்கப்படும் கொடுமையை நினைத்துக் கண்ணீர் சிந்துகிறார்.

**"மல்லிகை போன்ற மெல்லிய விரல்கள்**
**சல்லியும் மணலும் அள்ளிட நேரும்**
**சந்தனம் மணக்கும் செந்தளிர்க் கைகள்**
**கந்தகம் உருட்டிடும் கண்களும் இருள**
**பட்டுத் தறியின் இழைகள் பட்டு**
**கட்டுக் குலைந்து ஈரல்கள் சுருங்கும்"**[125]

என்று குழந்தைத் தொழிலாளர்களுக்காக நெஞ்சம் உருகுகிறார். பாத்திரங்களை அடகு வைப்பது போல குழந்தைகளைப் பணத்திற்கு அடகு வைக்கும் அவலங்களையும் குழந்தைத்தனத்தை திருடிக் கொண்டு இலந்தைப் பழத்தைத் தருவது போல சொற்ப பணத்தைக் கூலியாகக் கொடுக்கும் இதயமற்றவர்களையும் அடையாளங்காட்டுகிறார் இறையன்பு.

## 11. சுற்றுச்சூழல்

**"இயற்கை ஒரு சமதன்மையை உள்ளடக்கியிருக்கிறது. அதன் சமதன்மை சிறிது பாதிக்கப்பட்டாலும் நாம் முற்றுமாகப் பாதிக்கப்படுகிறோம்."**[126]

ஒரு குளத்தில் பாசியும் மீனும் இருக்கின்றன. மீன் பாசியை உண்கிறது. இனப்பெருக்கம் செய்கிறது. பாசி குறைய ஆரம்பிக்கிறது. பாசி குறையக் குறைய மீனின் எண்ணிக்கையும் குறைகிறது. மறுபடியும் பாசி பெருக ஆரம்பிக்கிறது. இதுதான் இயற்கையின் சமதன்மை. இயற்கையின் சமதன்மை பாதிக்கப்படும்பொழுது பல உயிர்கள் அழிந்து காணாமல் போய்விடலாம். சில பகுதிகள் தண்ணீரில் மூழ்கி விடலாம்.

இயற்கை நம்மிடம் ஒப்படைத்திருக்கின்ற பல வகையான செடி, மரம், பூச்சிகள், புழுக்கள், பறவைகள், விலங்குகளைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு அவற்றை ஒப்படைக்க வேண்டியது நம் கடமை.

**"இன்றைய சூழலில் சுற்றுச்சூழல் என்பது ஆழமான செயல்பாடுகளைக்**
**குறித்த சிந்தனைகளை மேம்படுத்துவதாக இல்லாவிட்டால்**
**அடுத்த தலைமுறையை நாம் பின்னுக்குத் தள்ளி விடுவோம்"**[127]

என்கிறார் இறையன்பு.

**"உணவு, உடை, உறையுள் இவற்றோடு சுற்றுசூழலும்அடிப்படையான**
**தேவை என்பதை நாம் உணர வேண்டும்.மற்ற தேவைகளைப்**
**பூர்த்தி செய்து கொள்ள சுற்றுச்சூழலே ஆதாரமாக இருக்கிறது."**[128]

என்கிறார் ஆசிரியர்.

## 11.1. சுற்றுச்சூழலின் வகை

சுற்றுச்சூழலை இரண்டாகப் பிரிக்கலாம்.

1. மேலோட்டமான சுற்றுச்சூழல் (Shallow Ecology) மனிதர்களை மையமாகக் கொண்டது. அது மனிதனை இயற்கைக்கு அப்பாற்பட்டவனாக அனைத்தையும் இயக்குபவனாக, இயற்கைக்கு உபயோகமுள்ளவனாகக் கருதுகிறது.
2. ஆழமான சுற்றுச்சூழல் (Deep Ecology) மனிதனையும் சுற்றுச்சூழலில் இயற்கையின் ஒரு அங்கமாகக் கருதுகிறது.

## 11.2. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வழி

மரம் நடுவது சுற்றுச்சூழலில் ஒரு பகுதி. மரம் நடுவதால் மண்ணரிப்பைத் தடுக்கலாம். காற்றைச் சுத்திகரிக்கலாம். வெப்பத்தைத் தவிர்க்கலாம். பூமியின் வளத்தை அதிகரிக்கலாம். ஆனால் மரம் நடுவதால் மட்டுமே இயற்கையைப் பாதுகாத்து விட முடியாது.

இன்றைய சூழலில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது வெறும் பேச்சிலும் எழுத்திலும் தான் உள்ளது என்பதை தன் புத்தகத்திற்கு அணிந்துரை கேட்டு வந்த எழுத்தாளரிடம் ,

**"எதைப் பற்றி எழுதியிருக்கிறீர்கள்?**
**சுற்றுச்சூழலின் மேன்மையைப் பற்றி .....**
**குறிப்பாக .....**
**இனி ஒரு மரம் கூட வெட்டப்படக் கூடாது**
**என வலியுறுத்தி .....**
**..... ..... ..... ..... ..... ..... ..... .....**
**இதை அச்சிடத் தேவைப்படும் காகிதங்களுக்காகப்**
**பல மரங்கள் வெட்டப்பட வேண்டியிருக்குமே"[129]**

என்று அறிஞர் வினவுவதிலிருந்து சுற்றுச்சூழல் பாதுகாப்பு செயலில் இல்லை என்பதை இறையன்பு எடுத்துக்காட்டுகிறார்.

## 12. மரணம்

இறைவனின் படைப்பில் மரணம் குறித்துச் சிந்தித்துத் துயர்படுவது மனித இனம் மட்டுமே. மறுதேதி குறிப்பிடாமல் நிச்சயமான பயணமே நம் வாழ்க்கைப் பயணம். ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கையில் நாடுவது அறம், பொருள், இன்பம், வீடுபேறு மட்டுமே. வாழுகின்ற காலத்தில் எதற்கும், யாரையும் கண்டு அஞ்சாத மனிதன் மரணத்தைக் கண்டே பயப்படுகின்றான்.

மரம், செடி, கொடிகள் பூத்துக் குலுங்குகின்றன. பறவைகள் விடியலை கானம்பாடி வரவேற்கின்றன.

**“மரணம் என்பது ஒரு குறியீடு அது மனிதனைக் கவலையில்ஆழ்த்துகின்ற குறியீடு மட்டுமல்ல.வாழ்க்கையில் நடக்கிற ஒவ்வொரு மாற்றத்தின் போதும் அவனைப் பிடித்திருக்கின்ற ஆட்டத்தின் வெளிப்பாடு”[130]**

என்கிறார் இறையன்பு.

## 12.1. மரணம் - உறக்கமே

நாம் குளிர்காலத்தில் அனல் மூட்டுகிறோம். வெயில் காலத்தில் குளிர் சாதனப் பெட்டியைத் தேடுகிறோம். இல்லாததே நம்மை ஈர்க்கிறது. “மரணம் என்பது இரவு உறக்கத்தைப் போன்றது” என்கிறார் மார்ட்டின் லூதர்.

**“உறங்குவது போலும் சாக்காடு”[131]**

என்று உறக்கத்தையும் இறப்பையும் ஒப்பிடுகின்றார் வள்ளுவர்.

மரணம் என்பது ஒரு சின்ன இடைக்கால மாற்றம் மட்டுமே என்று குறிப்பிடும் இறையன்பு,

**“காற்றை உள்ளிழுக்கின்ற போது நாம் உயிர் வாழ்வது தொடர்கிறது என்று சொன்னால், அந்தக் காற்றை வெளிவிடும் போது நாம் வாழுகின்ற ஒவ்வொரு நொடியும் குறைந்துபோகிறது. பிறப்பும் இறப்பும் ஒரே விகிதத்தில் நடந்து கொண்டிருக்கிறது”[132]**

என்கிறார்.

## 12.2. பிறப்பும் மரணமே

ஒரு குழந்தை பிறக்கிறது. பிறக்கும்பொழுது அழுகிறது. நம்மைப் பொறுத்த வரை எது தோற்றமாக இருக்கிறதோ, அது அந்தக் குழந்தையைப் பொறுத்த வரை மரணமே. பாதுகாப்பான, கதகதப்பான சூழலில் உண்ண வேண்டிய அவசியமின்றி, சுவாசிக்க வேண்டிய கட்டாயமின்றி எல்லாவற்றையும் தனக்காக வேறு ஒருவர் செய்கின்ற சூழலில் இருந்து புதிய சூழலுக்குள் புகுவது ஆபத்தானது தான்.

**“ஒவ்வொரு புதிய சூழலில் நுழையும் போதும் நமக்குள் ஒரு மரணம் நிகழ்கிறது”[133]**

என்கிறார் இறையன்பு.

மனிதனைத் தவிர மற்ற உயிர்கள் எல்லாமே ஆபத்துகளுடன் வாழ்வதையே விரும்புகின்றன. அதனாலேயே பறவைகளும் பாதுகாப்பான கூண்டை விட, ஆபத்தான ஆகாயத்தையே தேர்ந்தெடுக்கின்றன. மரங்கள் ஓய்வெடுக்கும் நேரம் இலையுதிர் பருவம். இலையுதிர் காலத்தில் நமக்குக் காய், கனி, நிழல், மலர், மணம்

எதுவுமே கிடைக்காததால், மரங்களின் இலையுதிர் என்பது வருத்தத்தின் வரவு, சோகத்தின் உருவமாய் நமக்கு தோன்றுகிறது. ஆனால் மரங்களுக்கோ,

**"இலையுதிர் என்பது மௌனம்**
**இலையுதிர் என்பது விரதம்**
**இலையுதிர் என்பது தியானம்**
**இலையுதிர் என்பது தவம்"**[134]

என்பதால் அவை நேசிப்புடன் காத்திருக்கின்றன. ஒவ்வொரு மரணமும் புதிய தோற்றத்திற்கான நுழைவாசல் என்பதை,

**"ஒரு மூங்கிலின்**
**மரணத்தில்**
**கண் திறந்தது**
**ஒரு புல்லாங்குழல்"**[135]

என்கிறார் கவிஞர் இறையன்பு.

## 12.3. மரணம் ஒரு முறையல்ல

மரணம் என்பது ஒரேடியாக நிகழ்வது இல்லை. அது ஒரு தொடர்ச்சியான நிகழ்வு. மரணம் என்பது பிறக்கும் தருணத்திலேயே ஆரம்பமாகும் அற்புத நிகழ்வு. குழந்தையைப் பொறுத்த வரை ஒவ்வொரு பருவமும் இழப்புதான். கரு, சிசு, மகவு, குழவி, குழந்தை, மதலை என்று கொஞ்சம் கொஞ்சமாக வளர்ச்சியை நாம் வார்த்தைகளால் சித்தரிக்கின்றோம்.

**"நாம் ஒரேடியாக மரணம் அடைவதில்லை.**
**ஒவ்வொரு நாளுமே மரணமடைகிறோம்."**[136]

என்கிறார் ரோஷிபிலிப். கண்ணுக்குத் தெரியாமல் ஒவ்வொரு பருவம் முடிகிறபொழுதும் மரணம் அடைகிறோம் என்பதை குண்டலகேசி,

**"பாளையாம் பருவம் செத்தும்**
**பாலனாம் தன்மை செத்தும்**
**காளையாம் பருவம் செத்தும்**
**காமுறும் இளமை செத்தும்**
**மீளுமிவ் வயதும் இன்னே**
**மேல்வரு மூப்புமாகி**
**நாளும் நாம் சாகின்றோமால்**
**நமக்கு நாம் அழாததென்னே"**[137]

என்று பகர்கின்றது.

ஒவ்வொரு இறப்பிற்காகவும் அழும் அழுகை அவர்களின் மரணத்திற்கான முன்னோட்டமே என்பதை ,

**"தங்கள் மரணத்திற்கு**
**அழ முடியாததால்**
**ஒவ்வொரு மரணத்திலும்**
**அழுதுவிடும் அவர்கள்**
**அங்கே அழுகை ஓலத்துடன்"[138]**

என்று இறையன்பு குறிப்பிடுகிறார்.

## 12.4. சாகும் கலை

வாழ்வது மட்டுமல்ல. சாவதும் ஒரு கலைதான்.

**"மரணத்தைக் கண்டு பயப்படுவது தெரியாதவற்றைச்சந்திக்கப் போவதனால் அல்ல. இருப்பவற்றை இழக்க நேரிடுமே என்ற தவிப்பால்தான்"[139]**

என்கிறார் இறையன்பு. மரணத்தை ஏற்றுக் கொள்ளத் துணிபவர்களுக்கு மரணம் ஒரு பொருட்டல்ல. சாவு குறித்த பயமும் அவர்களுக்கு இல்லை. சாவை எதிர்நோக்கும் ஒவ்வொரு மனிதனும், ஐந்து நிலைகளில் தன்னை தயார்படுத்திக் கொள்கிறான் என்கிறார் இறையன்பு.

1. மறுத்தல் (Denial) தனக்கு மரணம் வராது என்று மறுப்பது.
2. கோபம் (Anger) ஒரு கட்டத்தில் தனக்கு மரணம் நிகழும் என்று தெரிந்தவுடன் அது கோபமாக மாறும். தன் நிலைக்குப் பிறரைக் காரணமாக்கிப் பழிப்பர்.
3. பேரம் பேசுதல் (Bargaining) இன்னும்கொஞ்ச நாள் வாழவேண்டும் என்ற ஆசை ஏற்படும். நிறைவேறாத கடமைகள் எல்லாம் கண் முன் வந்து பயமுறுத்தும். மரணத்தை முடிந்தவரை தள்ளிப்போட மனம் நினைக்கும்.
4. சோர்வு(Depression) இனி வேறு வழியில்லை என்ற எண்ணம் வாழ்க்கையைப் பிடிப்பற்றுப் போகச் செய்யும். மரணத்திற்கு முன்பே பலர் நடைபிணமாகி விடுவர்.
5. ஏற்றுக்கொள்ளுதல் (Acceptance) மனம் மரணத்தைச் சந்திக்கத் தயாராகி விடுகிறது. ஆத்மாவுக்கு அழிவில்லை என்றுகூறி பக்குவப்பட்டு விடுகிறான். வாழ்க்கையை அதிசயமாய் உணர்ந்து அதில் மூழ்கி ருசிப்பன் மரணத்தையும் அழகாக்கிக் கொள்கிறான் என்கிறார் இறையன்பு.

## 12.5. மரணத்தை வெல்லும் வழி

மரணத்தை வெல்வது என்பது மரணம் அடையாமல் இருப்பதல்ல. மரணம் என்கிற முற்றுப் புள்ளியைக் காற் புள்ளியாக மாற்றி, தன் அன்பினாலும்

கருணையினாலும் இந்த பூமியில் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பதுதான் என்று கூறும் இறையன்பு. "மரணம் என்று நிகழும் என்பது தெரியாமல் இருப்பது தான் வாழ்வின் ரகசியம்" என்கிறார். மரணம் ஓர் அத்தியாவசியமான நிகழ்வு என்பதை உணர்ந்தவர்களால் தான் மரணத்தை வெல்ல முடியும்.

> **"கண்களைக் கொடுத்து பிறர் விழிகளின் மூலமாக உலகத்தைப் பார்ப்பது. இதயத்தைத் தந்து வேறொருவரின் வாழ்க்கையைத் தொடரச் செய்வது. இரத்தத்தைக் கொடுத்து இன்னொருவர் வாழ்க்கையைத் தொடரச் செய்வது"**[140]

ஆகியவற்றால் மரணத்தை வெல்ல முடியும் என்கிறார் இறையன்பு.

**13. தொகுப்புரை**

- ❖ மக்கள் கூடி வாழும் அமைப்பே சமுதாயம்
- ❖ எந்த ஒரு படைப்பாளனும் தான் வாழுகின்ற சமுதாயத்தின் தாக்கமின்றி எந்த ஒரு படைப்பையும் படைக்க இயலாது.
- ❖ நாட்டின் வளர்ச்சி என்பது செல்வச் செழிப்பைக் கொண்டு கணக்கிடப் படாமல் மக்களின் மகிழ்ச்சியைக் கொண்டு கணக்கிடப்பட வேண்டும்.
- ❖ வயதான காலத்தில் பிள்ளைகள் உறுதுணையாக இருப்பார்கள் என்ற எதிர்பார்ப்பில் தான் குடும்ப அமைப்பே ஏற்படுகிறது.
- ❖ குடும்பம் என்ற மாளிகை அழகுற விளங்க, திருமணமே அடித்தளமாகின்றது. காதல் மணமானாலும், பெரியோர்களால் செய்து வைக்கப்பட்டத் திருமணமானாலும் அது அன்பின் அடிப்படையில் அமைய வேண்டும்.
- ❖ திருமணத்தில் பெண்ணுக்குச் சீதனமாக பல பொருட்களைத் தருவதும் வரதட்சனையும் காலங்காலமாய்த் தொடர்ந்தே வந்துள்ளது.
- ❖ போலியான கௌரவத்திற்காகவும் வீண் பகட்டுக்காகவும் திருமணங்கள் விமரிசையாகச் செய்யப்படுகின்றன.
- ❖ திருமணம் எல்லா பெண்களுக்கும் வரமாக அமைவதில்லை. திருமணத்திற்குப் பின் பெண்கள் படிப்பை நிறுத்தி விடுகின்றனர். பணிக்குச் செல்வது அவர்களுக்குச் சுகமாக இல்லாமல் கூடுதல் சுமையாகவே உள்ளது.
- ❖ இல்லறம் போராட்டமாக இல்லாமல் நீரோட்டமாக அமைய வேண்டும்.
- ❖ குடும்பம் கோவிலாக இல்லாமல் தீவாக மாறிவிட்ட நிலையில், கணவனும் மனைவியும் பரஸ்பரம் புரிதலோடு வாழ்ந்தால் இல்லறம் நல்லறமாகும்.
- ❖ பெண்களாலேயே பெண் குழந்தைகள் பெரிதும் புறக்கணிக்கப் படுகின்றனர்.

- பெற்றோர்கள் வயதான காலத்தில் பிள்ளைகளுடன் சென்று வசிக்காததற்கு அவர்கள் வாழ்ந்த ஊரை விட்டுப் பிரிய விரும்பாததே காரணம்.
- உணவும் உடையும் மனிதனின் அத்தியாவசிய தேவை. ஒவ்வொரு காலத்திலும் இவை கிடைக்கப்பெறாமல் வாடும் சமூகத்தினர் ஒரு சாரார் இருக்கவே செய்கின்றனர்.
- தமிழர்கள் விருந்தினரைப் போற்றி உபசரிப்பதில் சிறந்தவர்கள்.
- மக்களிடம் பல்வேறு நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் இருந்து வந்துள்ளன. நம்பிக்கையும் மூட நம்பிக்கையும் சம அளவு இருந்துள்ளது.
- மகிழ்ச்சியான வாழ்க்கையை அடைவதை குறிக்கோளாகக் கொண்ட கல்வி, இன்று வயிற்றுக் கல்வியாக மாறிவிட்டது. கல்வி நிறுவனங்கள் வர்த்தகத்தலமாக மாறிவிட்டன.
- சமுதாயத்தில் பெண்கள் ஆணைச் சார்ந்தே வாழ்கின்றாள். கல்வியறிவில்லாத பெண்கள் வஞ்சிக்கப்படுகின்றனர்.
- சாதி, தமிழ் ரத்தத்தோடு கலந்துவிட்ட பெருநோய். இன்றும் சாதியின் பெயரால் மக்கள் வேறுபடுத்தப்படுகின்றனர்.
- மனிதனுக்குள் இருக்கும் இறைத்தன்மையை உணர்வதே ஆன்மீகம்.
- கோடி நன்மை பெறும் நோக்கில் கூடி வாழ்ந்த மக்கள் சமுதாயம் உருவாக்கியதே அரசாங்கம்.
- அரசுநிர்வாகமும், ஊழியர்களும் உண்மையான சேவை மனப் பான்மையுடன் நடந்தால் அரசாங்கம் அமைக்கப்பட்டதன் நோக்கம் ஈடேறும்.
- வேலைக்காக யாருடைய சிபாரிசையும் நாடாமல், பிறரிடம் கையேந்தாமல் தன் கையை மட்டுமே நம்பி சுய தொழிலில் ஈடுபட்டால், காடு செழிக்கும், கழனி கொழிக்கும்.
- குழந்தைத் தொழிலாளர்கள் உருவாக்கப்பட அவர்களின் பெற்றோரே காரணம். பிஞ்சு நெஞ்சங்கள் தன் குழந்தைப் பருவத்தைக் குதூகலமாய்க் கழிக்க வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டும்.
- மரணம் முடிவல்ல, ஆரம்பம். மரணத்தை வெல்ல இறந்த பின்னும் வாழ்வாங்கு வாழ உடல் உறுப்புகளைத் தானம் செய்வதே சிறந்த வழி.

## அடிக்குறிப்புகள்

1. நமது சமூகச் சீர்கேடுகள், உதயமூர்த்தி. எம்.எஸ்.,ப. 2
2. தமிழ்ச் சமுதாயம், வெங்கடேசன். மே., ப. 3
3. சமுதாயமும் சமூகமும், பரமசிவானந்தம். அ.மு., ப. 34
4. ஒப்பில்லாமதிவாணன்ஆய்வுக்கோவை 20-வதுகருத்தரங்கு தொகுதி,1, ப. 345
5. முடியரசன் படைப்புகள் ஓர் ஆய்வு, ஸ்ரீகுமார். எஸ்.,ப. 34
6. இனியவை இனியவை இறையன்பு, சுந்தர ஆவுடையப்பன், பதிப்புரை . ப.III
7. முகத்தில் தெளித்த சாரல், இறையன்பு.வெ., ப. 132
8. அழகோ அழகு,பேச்சு வார்த்தை, இறையன்பு.வெ.,ப. 113
9. சின்னச்சின்ன மின்னல்கள், இறையன்பு.வெ., ப. 30
10. மேலது, ப. 30
11. வாய்க்கால் மீன்கள், இறையன்பு.வெ., ப. 10
12. ஆத்தங்கரை ஓரம், இறையன்பு.வெ., ப.5
13. பண்பாட்டுச் சிந்தனைகள், முத்துலஷ்மி. வே., ப. 109
14. வாய்க்கால் மீன்கள், இறையன்பு.வெ.,பக். 19, 20
15. ஆத்தங்கரை ஓரம், இறையன்பு.வெ., ப. 3
16. மேலது, ப. 2
17. ஏழாவது அறிவு, பாகம் II , இறையன்பு.வெ., பக் 219, 220
18. தொல்காப்பியம், நூற்பா எண். 1091
19. வாய்க்கால் மீன்கள், இறையன்பு.வெ.,ப. 91
20. குறுந்தொகை, ப. 40
21. பூனாத்தி, தெவச சாப்பாடு, இறையன்பு.வெ., ப. 65
22. பூபாத்திற்கொரு புல்லாங்குழல், முதிர்ச்சி, இறையன்பு.வெ.,ப. 88
23. பூனாத்தி, வருமானத்திற்கதிக சொத்து, இறையன்பு.வெ.,, ப. 57
24. சாகாவரம், இறையன்பு.வெ., ப. 18
25. வைகை மீன்கள், இறையன்பு.வெ., ப. 87
26. மேலது, ப. 59
27. மேலது, ப.29
28. பூனாத்தி, தாம்பத்யம், இறையன்பு.வெ.,, ப. 40

29. ஆத்தங்கரை ஓரம், இறையன்பு.வெ.,ப. 19
30. மேலது, ப. 113
31. மேலது, ப. 119
32. திருக்குறள், திருவள்ளுவர், எண் 45
33. வைகை மீன்கள், இறையன்பு.வெ.,ப.85
34. மென்காற்றில் விளைசுகமே, இறையன்பு.வெ., ப. 26
35. சாகாவரம், இறையன்பு.வெ.,ப. 13
36. இலக்கிய மணிகள், நிர்மலா மோகன்,ப. 19
37. ஏழாவது அறிவு, பாகம். III ,இறையன்பு.வெ., ப. 45
38. சாகாவரம், இறையன்பு.வெ., ப . 217
39. திருக்குறள், திருவள்ளுவர், எண். 69
40. பூனாத்தி, வருமானத்திற்கதிக சொத்து, இறையன்பு.வெ., ப. 59
41. பூபாத்திற்கொரு புல்லாங்குழல், பனித்துளியில் பாற்கடல், இறையன்பு.வெ.,ப. 64
42. பூனாத்தி, தாம்பத்யம், இறையன்பு.வெ.,, ப. 35
43. நரிப்பல் , இரங்கல், இறையன்பு.வெ., ,பக் 8, 9
44. பூபாத்திற்கொரு புல்லாங்குழல், விழிக்க ஒரு தாலாட்டு, இறையன்பு.வெ., பக் .97, 98
45. வைகை மீன்கள், இறையன்பு.வெ.,ப. 46
46. நரிப்பல், சமர்ப்பணம், இறையன்பு.வெ.,ப.114
47. மேலது, சிறகுகள் வேண்டும், ப. 20
48. சாகாவரம், இறையன்பு.வெ.,ப. 38
49. ஆத்தங்கரை ஓரம், இறையன்பு.வெ., ப. 174
50. பூனாத்தி , வரம் தர வேண்டும், இறையன்பு.வெ., ப. 94
51. அரிதாரம், இன்னுமோர் இரவு, இறையன்பு.வெ.,ப. 39
52. வைகை மீன்கள், இறையன்பு.வெ.,ப. 78
53. அரிதாரம், மனித்தப்பிறவியும் வேண்டுவதே, இறையன்பு.வெ., ப. 78
54. அழகோ அழகு , இறையன்பு.வெ.,ப. 42
55. வேடிக்கை மனிதர்கள், இறையன்பு.வெ., ப. 158
56. அரிதாரம், மனித்தப்பிறவியும் வேண்டுவதே, இறையன்பு.வெ.,ப. 78
57. பாரதியார் கவிதைகள், பாரத சமுதாயம், பாரதியார், ப. 172

58. பூபாத்திற்கொரு புல்லாங்குழல், சருகுகள் சலசலக்கின்றன,
இறையன்பு.வெ., ப. 26

59. ஓடும் நதியின் ஓசை, பாகம் 1, இறையன்பு.வெ., ப. 24

60. சறுக்கு மரம், உணவு, இறையன்பு.வெ., ப. 40

61. திருக்குறள், திருவள்ளுவர், எண் 954

62. சறுக்கு மரம், உணவு, இறையன்பு.வெ., ப. 41

63. திருக்குறள், திருவள்ளுவர், எண். 83

64. வாய்க்கால் மீன்கள், இறையன்பு.வெ., ப. 31

65. ஆத்தங்கரை ஓரம், இறையன்பு.வெ., ப. 16

66. சறுக்கு மரம், உணவு, இறையன்பு.வெ., ப. 44

67. அறஇயலும் பண்பாடும், முத்துலஷ்மி. ச., ப. 9

68. ஆத்தங்கரை ஓரம், இறையன்பு.வெ., ப. 37

69. மேலது , ப. 103

70. நரிப்பல், துப்டன் டெம்பா, இறையன்பு.வெ., ப. 60

71. பூனாத்தி ,இறையன்பு.வெ., ப. 115

72. ஆத்தங்கரை ஓரம், இறையன்பு.வெ., ப. 96

73. பூபாத்திற்கொரு புல்லாங்குழல், இந்தப் புல்லாங்குழல் ஒரு
பூபாளத்திற்காக, இறையன்பு.வெ., ப. 46

74. ஆத்தங்கரை ஓரம், இறையன்பு.வெ., ப. 104

75. அழகோ அழகு, கடவுள், இறையன்பு.வெ., ப. 36

76. சின்னச்சின்ன வெளிச்சங்கள், இறையன்பு.வெ., ப. 128

77. பூபாத்திற்கொரு புல்லாங்குழல், விபரீதம், இறையன்பு.வெ., ப. 95

78. ஆத்தங்கரை ஓரம், இறையன்பு.வெ., ப. 145

79. பூபாத்திற்கொரு புல்லாங்குழல், பட்டிமன்றங்கள்,
இறையன்பு.வெ., ப. 63

80. திருக்குறள், திருவள்ளுவர், எண். 580

81. விவேகானந்தர் அறிவுரை, அண்ணாமலை.இரா.,பக். 37, 38

82. இனியவை நாற்பது ,ப. 36

83. வைகை மீன்கள், இறையன்பு.வெ., ப. 23

84. மேலது, ப. 82

85. அவ்வுலகம், இறையன்பு.வெ., ப. 24

86. ஆத்தங்கரை ஓரம், இறையன்பு.வெ., ப. 28

87. சறுக்கு மரம்,படிப்பும் பாடமும், இறையன்பு.வெ., ப. 21
88. வைகை மீன்கள், இறையன்பு.வெ., ப. 133
89. மேலது , ப. 33
90. இலக்கிய மணிகள், நிர்மலா மோகன், ப. 10
91. பாரதியார் கவிதைகள், பாரதியார். ப. 478
92. பூபாத்திற்கொரு புல்லாங்குழல், சுமைகள் குறைவதில்லை, இறையன்பு.வெ., ப. 75
93. மேலது, விசாரிக்கப்படாத விலாசங்கள், ப. 84
94. மேலது, இதழ்கள் உதிர்கின்றன ஒவ்வொன்றாய், ப. 5
95. மேலது, விசாரிக்கப்படாத விலாசங்கள், ப. 86
96. பாரதியார் கவிதைகள், பாரதியார். ப. 271
97. பாரதிதாசன் பாடல், ப. 327
98. வாய்க்கால் மீன்கள், இறையன்பு.வெ., ப. 26
99. அழகோ அழகு, வழிவிடுங்கள், இறையன்பு.வெ., ப. 53
100. மேலது, ப. 48
101. சின்னச்சின்ன மின்னல்கள், இறையன்பு.வெ., ப. 186
102. பூபாத்திற்கொருபுல்லாங்குழல், ஜன்னல் திரைகள், இறையன்பு.வெ., ப. 89
103. ஏழாவது அறிவு, பாகம். Iஇறையன்பு.வெ., ப. 169
104. பூபாத்திற்கொரு புல்லாங்குழல், தாமரை இலைமீது தண்ணீராய், இறையன்பு.வெ., ப. 56
105. சின்னச்சின்ன மின்னல்கள், இறையன்பு.வெ., ப. 146
106. வாய்க்கால் மீன்கள், இறையன்பு.வெ., ப. 21
107. மேலது , ப. 74
108. நரிப்பல், இரங்கல்,இறையன்பு.வெ., ப. 1
109. திருக்குறள்,திருவள்ளுவர், எண் .386
110. நரிப்பல்,இரங்கல், இறையன்பு.வெ., ப. 5
111. ஆத்தங்கரை ஓரம், இறையன்பு.வெ., ப. 14
112. வேடிக்கை மனிதர்கள், இறையன்பு.வெ., ப. 18
113. வாய்க்கால் மீன்கள், இறையன்பு.வெ., ப. 170
114. சின்னச்சின்ன மின்னல்கள், இறையன்பு.வெ., ப. 58
115. மேலது , ப. 54

116. பூபாத்திற்கொரு புல்லாங்குழல், கையூட்டு, இறையன்பு.வெ., ப. 28

117. உள்ளொளிப் பயணம், இறையன்பு.வெ., ப. 28

118. ஓடும் நதியின் ஓசை, பாகம் IIஇறையன்பு.வெ., ப.122

119. வைகை மீன்கள், இறையன்பு.வெ., ப.72

120. அரிதாரம்,வழுக்கைமுகம், இறையன்பு.வெ., ப. 28

121. வேடிக்கை மனிதர்கள், இறையன்பு.வெ., .பக். 37, 38

122. சின்னச்சின்ன மின்னல்கள், இறையன்பு.வெ., ப. 92

123. வேடிக்கை மனிதர்கள், இறையன்பு.வெ., ப. 38

124. மேலது, ப. 38

125. சறுக்கு மரம், குழந்தைகள்-அன்றும் இன்றும், இறையன்பு.வெ., ப.73

126. உள்ளொளிப் பயணம், இறையன்பு.வெ., ப.180

127. மேலது, ப. 183

128. மேலது, ப. 185

129. சின்னச்சின்ன மின்னல்கள், இறையன்பு.வெ., ப. 200

130. உள்ளொளிப் பயணம், இறையன்பு.வெ., ப. 40

131. திருக்குறள்,திருவள்ளுவர், எண். 339

132. மென்காற்றில் விளைசுகமே, இறையன்பு.வெ., ப. 152

133. ஏழாவது அறிவு,பாகம் 1, இறையன்பு.வெ., ப. 101

134. முகத்தில் தெளித்த சாரல், இறையன்பு.வெ., ப. 90

135. பூபாத்திற்கொருபுல்லாங்குழல்,மரணம்தந்தஜனனம், இறையன்பு.வெ., ப.79

136. ஏழாவது அறிவு, பாகம் III ,இறையன்பு.வெ., ப. 24

137. குண்டலகேசி, பா. 9

138. பூபாத்திற்கொரு புல்லாங்குழல், கண்ணீர்த்துளிகள் தவணையில், இறையன்பு.வெ., ப. 90

139. உள்ளொளிப் பயணம், இறையன்பு.வெ., ப. 208

140. மேலது , ப. 62